# ஈரோடு மாநகராட்சி

## மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 பங்குனித் திங்கள் 16–ஆம் நாள்)

2012–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29–ஆம் தேதி (29.03.2012) வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

– – –

**வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள்.**

**1)** ஈரோடு மாநகராட்சியுடன் வீரப்பன் சத்திரம், சூரம்பட்டி, காசிபாளையம், பெரிய சேமூர் ஆகிய நான்கு நகராட்சிகள், சூரியம்பாளையம், பிராமண பெரிய அக்ரஹாரம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள், முத்தம்பாளையம், திண்டல், வில்லரசம்பட்டி, கங்காபுரம், எல்லப்பாளையம் ஆகிய ஐந்து ஊராட்சிகளை உள்ளடக்கி 109.52 சதுர பரப்புள்ள பகுதியாக 25.10.2011 முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புக்களில் பல அனுமதியற்ற மனைப்பிரிவுகள் ஏற்பட்டு அதில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளது. அனுமதியற்ற சில மனைப்பிரிவுகளில் தார்சாலைகள் அமைக்கப்பட்டு அடிப்படை வசதிகள் மற்றும் வரிவிதிப்புகள் பல்வேறு கட்டங்களாக செய்யப்பட்டுள்ளது. சில மனைப்பிரிவுகளில் குடியிருப்பு வீடுகள் வளர்ச்சியடைந்தும், சாலை வசதி, குடிநீர், மின்சார வசதிகள் இல்லாமல் உள்ளது. அவ்வாறு உள்ள மனைப்பிரிவுகளில் வசிக்கும் பொதுமக்கள் அடிப்படை வசதிகள் செய்து தருமாறு கோரி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை வைக்கின்றனர். மாநகராட்சி சட்டவிதிகளின்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளை செய்தல் மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல் போன்ற செயல்பாடுகள் செய்ய இயலாத நிலை உள்ளது. ஆதலால் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல் போன்ற அடிப்படை தேவைகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத இடர்பாடுகளை தவிர்க்க 25.10.2011 முன்னர் ஏற்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகளை மாநகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்வதற்கும், அடிப்படை வசதிகள் செய்யப்படாமல் உள்ள மனைப்பிரிவுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்ய ஆகும் தொகையினை அரசிடமிருந்து மான்யமாக பெற்று சாலை அமைக்கவும், மாநகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்வதற்கும் உரிய உத்திரவு வழங்கக்கோரி அரசிற்கு முன்மொழிவு அனுப்ப இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**344. வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**2)** ஈரோடு மாநகரத்தில் தற்பொழுது போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகி போக்குவரத்து நெரிசல் பெருமளவு ஏற்பட்டுள்ளது. பிரதான சாலைகளான ஈ.வி.என். சாலை, பிரப் சாலை, காந்திஜி சாலை, ஆர்.கே.வி. சாலை, நேதாஜி சாலை, பவானி சாலை ஆகிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் அதிக அளவில் உள்ளது. போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு இணைப்புச் சாலைகள், மேம்பாலம், ரவுண்டானா சுற்றுச்சாலை அமைப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

மாநகராட்சி எல்லைக்குள் பிரப் சாலையிலிருந்து சி.எஸ்.ஐ பள்ளி வளாகம், சிதம்பரம் காலனி, பெரியார் நகர், பெரும்பள்ளம் ஓடை, கரிமேடு, சவானா ஹோட்டல் வளாகம் வழியாக சென்னிமலை ரோட்டினை (ரயில்வே நிலைய சாலை) இணைப்பதற்கு 80அடி திட்ட சாலை திட்டத்தில் உள்ளது. இதில் ஏற்கனவே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்திய பெரியார் நகர் குடியிருப்பு பகுதியில் திட்டத்தின்படி 80அடி சாலை விடப்பட்டு

தார்சாலையாக மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. கரிமேடு மனைப்பிரிவில் 80அடி திட்ட சாலைக்குண்டான இடம் விடப்பட்டுள்ளது. ஈரோடு மாநகரத்தில் நெருக்கமான வணிக வளாகங்கள் உள்ள பன்னீர்செல்வம் பூங்கா சந்திப்பில் போக்குவரத்து நெரிசலை குறைக்க பிரப் சாலையையும், சென்னிமலை ரோட்டையும் இணைக்க 80அடி திட்ட சாலை அமைக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். எனவே போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி 80அடி திட்ட சாலையை விரைவில் அமைப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள ஈரோடு உள்ளுர் திட்டக் குழுமத்தை கேட்டுக் கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**345. வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி 80 அடி திட்டச்சாலையை விரைவில் அமைப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கிறது. 52ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஆர். நீலாவதி அவர்கள் ஆட்சேபனை செய்தார்.**

## <u>21.12.2011-ம் தேதிய சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>

**3)** 33. இம்மாநகராட்சிக்கு சொந்தமான நேதாஜி சாலையில் IDSMT திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய வணிக வளாகக் கடைகள் தொடர்ந்து பலமுறை ஏலம் விடப்பட்டு மேற்படி கடைகளை இம்மாமன்ற தீர்மானம் எண்.179 நாள் 29.03.10 மற்றும் 198, 221, 249 நாள் 27.05.10 ஆகிய தீர்மானங்களில் ஏலதாரர்களின் உச்சகேள்வி தொகைகள் ஏற்கப்பட்டு 01.09.10ம் தேதி முதல் கடைகளை ஒப்படைக்கப்பட்டு பொதுஏல நிபந்தனைகளின்படி மீதம் உள்ள வாடகை முன்பணத் தொகைகளை செலுத்த அறிவிப்பு செய்யப்பட்டது. ஆனால் குத்தகைதாரர்கள் வாடகை அதிகமாக உள்ளதால் கடையை ஏற்று நடத்த முன்வரவில்லை. மேலும் முன்பண வைப்புத் தொகையையும் செலுத்த முன்வரவில்லை. எனவே மாமன்ற தீர்மான எண்.32 நாள் 28.01.2011-ன்படி குத்தகையை ரத்து செய்து குத்தகைதாரர்கள் செலுத்திய ஏலவைப்புத் தொகைகளை பறிமுதல் செய்யப்பட்டது. அதன்பின் மேற்படி கடைகளை மறு பொது ஏலம் விடப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த 23.03.11, 20.05.11, 02.06.11, 16.06.11 மற்றும் 28.06.11 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பொது ஏலத்தில் கடை எண்.1 மற்றும் 2-ற்கு ஏலவைப்புத் தொகை செலுத்திய ஏலதாரர்கள் தவிர மற்ற கடைகளுக்கு எவரும் ஏலவைப்புத் தொகை செலுத்த முன்வரவில்லை. எனவே மேற்காணும் ஏலத்தில் கேட்கப்பட்ட ஏலதாரர்களின் உச்சகேள்விகள் பின்வருமாறு-

| வ.எண். | கடை எண். | உச்சகேள்வி கோரியவர் | உச்ச கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | 1 | திரு. ஈ.பி. சேது த/பெ பொன்னுசாமி | 12,400/- |
| 2. | 2 | திரு. எஸ். எழில்குமார் த/பெ செல்வராஜ் | 12,900/- |

மேற்படி உச்சகேள்வி தொகையானது அரசு நிர்ணயம் செய்துள்ள தொகையை விட கூடுதலாக உள்ளதால் மேற்படி உச்சகேள்வி தொகை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது. மாமன்றம் 29.08.2011 நாள் 519 எண் தீர்மானத்தில் வாடகை நிர்ணயம் செய்ய தணிக்கை துறை கருத்துகேட்டு மீண்டும் பொருள் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் மாநில கணக்காயர், சென்னை அவர்களின் .11.11-ந் தேதிய தணிக்கை அறிக்கையில் மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள சதுரஅடி வாடகை ரூ.56.50 மற்றும் அருகில் உள்ள தனியார் இடங்களில் உள்ள கடைகளின் வாடகையை கணக்கிட்டு எது உயர்வாக உள்ளதோ அவற்றில் ஒன்றை வாடகையாக நிர்ணயம் செய்து ஏலம் விடலாம். இதனால் மாநகராட்சிக்கு தொடர்ந்து ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்கலாம் என கருத்து தெரிவித்து தணிக்கைத்தடை எழுப்பப்பட்டுள்ளது.

மேலும் ஏலத்தில் ஏலதாரர்கள் கோரியுள்ள வாடகை தொகையானது அருகில் உள்ள தனியார் கடைகளின் வாடகையை விட உயர்வாக உள்ளது. மேற்படி ஏலக்கேள்வித்

தொகையை மாமன்றம் உறுதி செய்யும்பட்சத்தில் மாநில கணக்காயர், சென்னை அவர்களின் ஆலோசனைப்படி மாநகராட்சிக்கு தொடர்ந்து ஏற்படும் இழப்பீட்டை தவிர்க்கலாம். எனவே மேற்படி இழப்பீட்டை தவிர்க்கும் பொருட்டு ஏலதார்களின் உச்சக்கேள்வித் தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள தொகையை விட கூடுதலாக உள்ளதால் ஏலக்கேள்வியை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு-

மேற்காணும் வணிக வளாகக் கட்டிடம் IDSMT திட்டத்தின் கீழ் கடன் பெற்று கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு உள்ளது. மேற்படி கடைகளை பலமுறை ஏலம் விடப்பட்டு பொருளில் கண்டுள்ள தீர்மானங்கள் மூலம் ஏலதாரர்களின் உச்சகேள்விகள் உறுதி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் மேற்படி உரிமதாரர்கள் ஏலநிபந்தனைகளின்படி உரிய வாடகை முன்பணத் தொகை செலுத்த முன்வராத காரணத்தால் மாமன்ற தீர்மானம் எண்.32 நாள் 28.01.11ன்படி உரிமதாரர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டு மேற்படி கடைகள் மறு பொதுஏலம் விடப்பட்டு வருகின்றது. அதன்படி சென்ற ஏலதாரர்களின் கேள்வித் தொகைகள் அரசு மதிப்பாக கருதப்பட்டு ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆதலால் ஏலத்திற்கு வைப்புத் தொகை செலுத்த எவரும் முன்வரவில்லை. மேலும் கடை எண்.1 மற்றும் 2-ற்கு ஏற்கனவே ஏல வைப்புத் தொகை செலுத்தியவர்கள் தாங்கள் கோரிய உச்சகேள்விக்கு மேல் ஏலக்கேள்விகள் கோர முன்வரவில்லை. மேற்படி ஏலதாரர்களின் கேள்வி தொகையானது மாநகராட்சி மதிப்பீட்டு சதுரஅடிக்கு தொகை ரூ.56.50-ஐ விட கூடுதலாகவும் மாநில கணக்காயர், சென்னை அவர்கள் தணிக்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு அருகில் உள்ள தனியார் இடங்களில் உள்ள வாடகைக்கு உயர்வாகவும் உள்ளது. எனவே மேற்படி வணிக வளாகம் கட்டப்பட்டு பல மாதங்களாக ஏலம் விடப்பட்டு ஏலத்தில் ஒருவர் கூட கலந்து கொள்ள முன்வராத நிலையில் மேற்படி கடைகளை ஒப்படைக்காமல் தொடர்ந்து ஏலம் விடப்பட்டு வந்தால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுகின்றது. எனவே மேற்படி இழப்பீட்டை தவிர்க்கும் பொருட்டு தனியார் இடங்களில் உள்ள வாடகையை விட கூடுதலாகவும் மேற்படி ஏலதாரர்களின் உச்சக்கேள்வி அரசு மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகவும் உள்ளதால் ஏலக்கேள்வியை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ2/4834/06**

**346. ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது. மறு ஏலம் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது.**

**<u>21.12.2011-ம் தேதிய அவசர கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>**

**4) 51.**இம்மாநகராட்சிக்கு சொந்தமான நேதாஜி சாலையில் IDSMT திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய வணிக வளாகக் கடைகள் தொடர்ந்து பலமுறை ஏலம் விடப்பட்டு மேற்படி கடைகளை இம்மாமன்ற தீர்மானம் எண்.179 நாள் 29.3.10 மற்றும் 198, 221, 249 நாள் 27.5.10 ஆகிய தீர்மானங்களின் ஏலதாரர்களின் உச்சகேள்வி தொகைகள் ஏற்கப்பட்டு 1.9.10ம் தேதி முதல் கடைகளை குத்தகைதாரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. மேலும் பொது ஏலநிபந்தனைகளின்படி உரிய வாடகை முன்பணம் செலுத்த அறிவிப்பு செய்யப்பட்டது. ஆனால் குத்தகைதாரர்கள் வாடகை அதிகமாக உள்ளதால் கடையை ஏற்று நடத்த முன்வரவில்லை. வாடகை முன்பணத் தொகையும் செலுத்தவில்லை. அதனால் மாமன்றத்திற்கு விபரங்கள் தொிவிக்கப்பட்டு தீர்மானம் எண்.32 நாள் 28.1.11ன் படி குத்தகையை ரத்து செய்து குத்தகைதாரர்கள் செலுத்திய ஏலவைப்புத் தொகைகளை பறிமுதல் செய்யப்பட்டது. அதன்பின் மேற்படி கடைகளை மறுபொது ஏலம் பலமுறை விடப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த 9.12.2011ம் தேதி நடைபெற்ற மறு பொது ஏல/ஒப்பந்தப்புள்ளியில் கீழ்காணுமாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் | கடை எண் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | மாநகராட்சி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திரு டி.முத்துகிருஷ்ணன் த-பெ.திம்மிநாயுடு | 5 | 10000 | 8662 |
| 2 | திரு டி.முத்துகிருஷ்ணன் த-பெ.திம்மிநாயுடு | 6 | 10000 | 9345 |
| 3 | திரு கே.முனிராஜ் த-பெ.குப்புசாமி | 12 | 8000 | 10613 |
| 4 | திரு கே.முனிராஜ் த-பெ.குப்புசாமி | 13 | 12150 | 11036 |
| 5 | திரு டி.முத்துகிருஷ்ணன் த-பெ.திம்மிநாயுடு | 14 | 11000 | 10296 |

மேற்காணும் கடைகளுக்கு பொது ஏலத்தில் கலந்துகொள்ள எவரும் வைப்புத் தொகை செலுத்தவில்லை. ஒப்பந்தபுள்ளிகள் மட்டுமே வரப்பெற்றது. இவற்றில் கடைஎண்.5,6,13 மற்றும் 14 ஆகியவற்றிற்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள மதிப்பீடுத் தொகைக்கு கூடுதலாக உள்ளது. கடைஎண்.12க்கு வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி மாநகராட்சி மதிப்பைவிட குறைவாக உள்ளது.

மேற்படி கடைகளை ஏலம்விட்டு ஒப்படைக்காத காரணத்தினால் பலலட்சம் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி கடைகளை மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள வாடகைக்கு அல்லது தனியார் கடைகளின் வாடகை ஆகியவை ஆய்வு செய்து இவற்றில் உயர்வாக உள்ள ஏலக்கேள்வித் தொகையை நிர்ணயம் செய்து குத்தகைதாரர்களுக்கு ஒப்படைத்தால் மாநகராட்சியின் இழப்பீட்டை தவிர்கலாம் என கருத்தும் தொிவிக்கப்பட்டுள்ளது. எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள வாடகை மதிப்பைவிட கூடுதலாக ஏலக்கேள்வி உள்ள கடைஎண்.5,6,13 மற்றும் 14ன் ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றம் ஏற்கலாம். கடை எண்.12 மீண்டும் ஏலம் போகாத கடைகளின் பட்டியலுடன் சேர்த்து மறு ஏலம் விட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-

கடைஎண்.5,6,13 மற்றும் 14க்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள வாடகையைவிட கூடுதலாக உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

கடை எண்.12ஐ மற்ற ஏலம் போகாத கடைகள் எண்.3,4,7,8,9,11,15,16.,19,24,27,28,29,31,41,42,47,49,51 மற்றும் 64 ஆகியவற்றுடன் சேர்த்து மீண்டும் மறு பொது ஏலம் விடலாம்.

**அ2-4839-06**

**347. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் அவர்கள் ஆட்சேபனை செய்தார்.**

**<u>09.02.2012-ம் தேதிய அவசர கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>**

**5) 48.** இம்மாநகராட்சியில் புதிய அலுவலகம் மற்றும் மாமன்றக்கூட கட்டிடத்திற்கு தேவையான பர்னிச்சர் பொருட்களை ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க மாமன்ற தீர்மான எண்.583 நாள். 28.08.11-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு இரண்டாம்

அழைப்பாக 23.11.2011 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த M/s. ஏ.பி. தாமஸ் வுட் இண்டியா (பி) லிமிடெட், ஈரோடு நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தகுதி பெறாததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள 21.12.2011-ம் தேதிய 234-ம் எண் மாமன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட மாமன்ற அனுமதியினை தொடர்ந்து இப்பணிக்கு மூன்றாம் அழைப்பாக 25.01.12 அன்று E-Tendering-ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | M/s. S.M.S. Industries, Ramanathapuram | Rs. 56,55,100.00 |
| 2. | M/s. The Trend, Erode | Rs. 45,99,219.60 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் டேவணித்தொகை ரூ.60000/-க்கான வங்கி வரைவோலை அளித்துள்ளார்கள். மேலும் இரண்டு நிறுவனங்களும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைகளுக்கான அத்தாட்சி சான்றிதழ்களை வழங்கியுள்ளார்கள். மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. The Trend, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. The Trend, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**இ1/7880/2008**

**348. அனுமதி வழங்கப்பட்டது.**

**6)** ஈரோடு மாநகராட்சியின் வருவாய் நிதி மற்றும் மூலதனநிதி (Revenue & Capital Fund ) குடிநீர் மற்றும் வடிகால் நிதி (Water Supply & Drainage Fund) மற்றும் ஆரம்ப கல்வி நிதி (Elementary Education Fund) ஆகிய நிதிகளுக்கு 2011-12ம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2012-13ம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்ஜெட் அறிக்கை அச்சடிக்க பணி உத்திரவு வழங்கியமைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**பி1/10722/2011**

**349. அங்கீகரிக்கப்பட்டது.**

**7).** இம்மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2012-13 முதல் 2014-15 முடிய அல்லது ஒப்படைக்கும் தேதி முதல் 31.03.2015 முடிய பொது ஏலம் விடவும், அவற்றுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள ஏல வைப்புத்தொகைகளையும் மற்றும் கீழ்க்கண்டுள்ள புதிய ஏல நிபந்தனைகளையும் மேலும் 2010-2013-ம் ஆண்டு பொது ஏல அறிக்கையில் கண்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண். | குத்தகை இனம் | ஏலம்/ ஒப்பந்தப்-புள்ளி செலுத்த வேண்டிய வைப்புத் தொகை<br>ரூ. | தேசிய-மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை தொகை<br>ரூ. | ஏலம்/ ஒப்பந்தப்-புள்ளி கேள்வி உறுதி செய்த பின் செலுத்த வேண்டிய தொகை<br>ரூ. | மண்டலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் 2-ம் பிளாட்பாரத்தில் "4x4" அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (பூக்கடை எண்.2) | 1,00,000 | 1,00,000 | உரிமத் தொகை முழுவதும் | II |
| 2 | பாரதி வீதியில் பெருந்தலைவர் காமராஜர் மாநகராட்சி சிலம்பரான் குட்டை தினசரி சந்தையில் மேற்கு பகுதியில் மட்டும் கட்டண வசூலிக்கும் உரிமம் | 50,000 | 50,000 | உரிமத் தொகை முழுவதும் | II |
| 3 | பிராமண பெரிய அக்ரஹாரத்திற்குட்பட்ட பவானி மெயின் ரோட்டில் கிழபுறமுள்ள குடிநீர் மேல் தொட்டி அருகில் (6'x12' ஆஸ்பெஸ்ட்டாஸ் கடைகள்-8) மீன் கடை நடத்திக் கொள்ளும் உரிமம் | 50,000 | 50,000 | உரிமத் தொகை முழுவதும் | I |
| 4 | பிராமண பெரிய அக்ரஹாரத்திற்குட்பட்ட உரம்புத் தோட்டத்தில் மேல்நிலைத் தொட்டி அருகில் (10'x10' தார்சு கடைகள்-19) வாரச்சந்தை நடத்திக் கொள்ளும் உரிமம் | 25,000 | 50,000 | உரிமத் தொகை முழுவதும் | I |
| 5 | சூரம்பட்டி பகுதியில் 2-ம் நெம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 25,000 | 50,000 | உரிமத் தொகை முழுவதும் | III |
| 6 | சூரம்பட்டி பகுதியில் 2-ம் நெம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள தினசரி மார்க்கெட்டிற்கு சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 1,00,000 | 1,50,000 | உரிமத் தொகை முழுவதும் | III |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட கவுண்டச்சிபாளையம் தென்னைமர பலன்தரும் மரங்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலைய தென்னை மர பலன் தரும் மரங்கள் ஆகிய குத்தகை அனுபவிக்கும் உரிமம் | 10,000 | 10,000 | உரிமத் தொகை முழுவதும் | III |
| 8 | சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட முத்தம்பாளையத்தின் அருகில் உள்ள மீன் குட்டைகள் மற்றும் திண்டல் அருகில் உள்ள மீன் குட்டைகளில் மீன் பிடித்துக் கொள்ளும் குத்தகை உரிமம் | 15,000 | 15,000 | உரிமத் தொகை முழுவதும் | III |
| 9 | சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட ஒண்டிக்காரன் பாளையம் மற்றும் வில்லரசம்பட்டி பள்ளி மற்றும் சானார்பாளையம் மந்தையில் தென்னைமரம் பலன்தரும் மரங்கள் குத்தகை அனுபவிக்கும் உரிமம் | 10,000 | 10,000 | உரிமத் தொகை முழுவதும் | III |
| 10 | காவேரி ரோட்டிலுள்ள (நேதாஜி மார்க்கெட்) கழிப்பிட கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) | 50,000 | 50,000 | உரிமத் தொகை முழுவதும் | II |

<u>ஏலம் நடத்தப்படும் அனைத்து இனங்களுக்கான பொது நிபந்தனைகள்</u>

1. <u>மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பூ வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம்</u>
   உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
   காப்புத் தொகை ரூ.3000/-

   ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

2. <u>பாரதி வீதியில் அமைந்துள்ள சிலம்பரான் குட்டை பெருந்தலைவர் காமராஜர் மாநகராட்சி தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</u>
   உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
   காப்புத் தொகை ரூ. 10000/-

   ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

3. <u>பிராமண பெரிய அக்ரஹாரத்தில் உள்ள மீன் கடை நடத்திக் கொள்ளும் உரிமம்</u>
   உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
   காப்புத் தொகை ரூ. 5000/-

   1. 6'x12' அளவுள்ள ஆஸ்பெஸ்ட்டாஸ் கடைகள்-8 சுங்கம் வசூலித்துக் கொள்ளலாம்.

2. மீன்கடை ஏலம் எடுப்பவர்கள் ஒதுக்கப்பட்ட இடத்தைத் தவிர சாலை ஓரத்தில் வியாபாரம் செய்யக் கூடாது.

3. குத்தகைதாரர்கள் இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் இழப்புகளுக்கு நஷ்ட ஈடு கேட்கக் கூடாது.

4. மீன்கடை குத்தகைதாரர்கள் ஏலக் குத்தகையை உள் குத்தகைக்கு விட அனுமதி இல்லை.

5. ஏலம் மற்றும் குத்தகை காலம் அரசு மற்றும் மாநகராட்சியின் மூலம் நிர்ணயிக்கும் விதிகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

6. ஏலக் காலம் முடிந்தவுடன் ஏலம் எடுத்தவர்கள் கடை மற்றும் வாரச்சந்தை கட்டிடத்திற்கு பழுதுகள் ஏற்படாதவாறு திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

4. <u>பிராமண பெரிய அக்ரஹாரத்தில் உள்ள வாரச்சந்தை நடத்திக் கொள்ளும் உரிமம்</u>
உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
காப்புத் தொகை ரூ. 1000/-

1. 10'x10' அளவுள்ள தார்சு கடைகள்-19, கடை ஒன்றுக்கு ரூ.10/- வீதம் கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம்.

2. சந்தைக்கு வரும் பொருட்களுக்கு ஈரோடு மாநகராட்சியின் 2010-2013-ம் ஆண்டு ஏல அறிக்கையில் கண்டுள்ள நேதாஜி தினசரி சந்தைக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் இதர நிபந்தனைகள் இதற்கு பொருந்தும்.

5. <u>சூரம்பட்டி பகுதியில் 2-ம் நெம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்</u>
உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
மின்சார வைப்புத் தொகை ரூ. 2000/-
காப்புத் தொகை ரூ.5000/-

1. கழிப்பிடங்களில் கீழேகண்டுள்ளபடி கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1. சிறுநீர் கழிக்க | ரூ.0.50 பைசா |
| 2. மலம் கழிக்க | ரூ.1.00 |

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

6. <u>சூரம்பட்டி பகுதியில் 2-ம் நெம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள தினசரி மார்க்கெட்டிற்கு சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமம்</u>
உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
காப்புத் தொகை ரூ. 5000/-

1. பழைய சூரம்பட்டி நகராட்சி எல்லை பெருந்துறை ரோடு பழைய ஈரோடு மாநகராட்சி எல்லை முடிவில் உள்ள (திண்டல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கட்டிடத்திலிருந்து) இடது புறம் மேற்கு பக்கத்திலிருந்து பெருந்துறை ரோடு வீரப்பம்பாளையம் பிரிவு எல்லை பழைய நகராட்சி எல்லை முடிவு வரையும் மற்றும் காந்திஜி ரோட்டில் உள்ள ஜெகநாதபுரம் காலனி ஆர்ச் முதல் பழையபாளையம் ஓடை மேடு வரை ஆகிய இடங்களில் சுங்கம் வசூல் செய்து கொள்ளலாம்.

2. கீழ்க்காணும் விவரப்படி சுங்க கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| சுங்க கட்டண விகிதம் | ரூ.பை. |
|---|---|
| 1) அனைத்து சிறிய வியாபாரிகளுக்கு | 4.00 |
| 2) அனைத்து பெரிய (கட்டுமான பொருட்கள்) லாரிகளுக்கு | 20.00 |
| 3) மினி ஆட்டோ & வேன் | 10.00 |
| 4) தரை கடைக்கு | 2.00 |

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

7. <u>சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட கவுண்டச்சிபாளையம் தென்னைமரம் பலன் தரும் மரங்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலைய தென்னைமர பலன் தரும் மரங்கள் ஆகிய குத்தகை அனுபவிக்கும் உரிமம்</u>
உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
காப்புத் தொகை ரூ.1000/-

1. மரங்களின் கிளைகள் சேதாரம் ஏதும் ஏற்படுத்தக் கூடாது.
2. சொந்தப் பொறுப்பில் மரங்களை பராமரித்து வர வேண்டும்.
3. மரங்களின் வளர்ச்சிக்கு தேவையான குடிநீர் மற்றும் உரங்கள் இட்டு வளர்த்து வர வேண்டும்.
4. மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடந்து கொள்ள வேண்டும்.

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

8. <u>சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட முத்தம்பாளையம் அருகிலுள்ள மீன்குட்டைகள் மற்றும் திண்டல் அருகிலுள்ள மீன்குட்டைகளில் மீன்பிடித்துக் கொள்ளும் குத்தகை உரிமம்</u>
உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
காப்புத் தொகை ரூ.1000/-

1. முத்தம்பாளையம் - முத்தம்பாளையம், இரட்டைப்பாலி வலசு, கொங்கனாம்பாளி, பழனிக்கவுண்டன்பாளையம்,
   திண்டல் - திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரி அருகில், மணக்காடு ஆகிய இடங்களில் உள்ள மீன்குட்டைகளில் மீன் பிடித்துக் கொள்ளலாம்.
2. குளத்தில் மீன்பிடித்துக் கொள்ளும் உரிமையைத் தவிர படகு சவாரி போன்ற ஆபத்தான வேறு எக்காரியங்களுக்கும் உபயோகப்படுத்தக் கூடாது.
3. விபத்து மற்றும் உயிரிழப்பு போன்ற காரணங்களுக்கு மாநகராட்சி பொறுப்பேற்காது. குத்தகைதாரரே முழுப்பொறுப்பாகும்.
4. குளத்தை எவ்வித சேதாரத்திற்கும் உள்ளாக்காமல் பாதுகாப்பாக பராமரிக்க வேண்டும்.
5. குளத்தில் மீன் புதியதாக விட்டு வளர்க்கக் கூடாது.
6. குளத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

9. <u>சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட ஒண்டிக்காரன் பாளையம் மற்றும் வில்லரசம்பட்டி பள்ளி மற்றும் சானார்பாளையம் மந்தையில் தென்னை மரம் பலன் தரும் மரங்கள் குத்தகை அனுபவிக்கும் உரிமம்</u>
உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
காப்புத் தொகை ரூ.1000/-

1. மரங்களின் கிளைகள் சேதாரம் ஏதும் ஏற்படுத்தக் கூடாது.
2. சொந்த பொறுப்பில் மரங்களை பராமரித்து வர வேண்டும்.
3. மரங்களின் வளர்ச்சிக்கு தேவையான குடிநீர் மற்றும் உரங்கள் இட்டு வளர்த்து வர வேண்டும்.
4. மரங்களில் ஏறும் போது விபத்துகள் ஏற்பட்டால் மாநகராட்சி பொறுப்பு ஏற்காது. குத்தகைதாரரே முழுப்பொறுப்பாகும்.
5. மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடந்து கொள்ள வேண்டும்.

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

10. <u>காவேரி ரோட்டிலுள்ள (நேதாஜி மார்க்கெட்) கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்)</u>
உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
மின்சார வைப்புத் தொகை ரூ.5000/-
காப்புத் தொகை ரூ.10000/-

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள வரிசை எண். 2, 4 மற்றும் 10-ல் கண்டுள்ள குத்தகை இனங்களை அதன் குத்தகைதாரர்கள் 2012-13-ம் ஆண்டிற்கு தொடர்ந்து நடத்த முடியவில்லை என எழுத்துமூலம் தெரிவித்துள்ளார்கள். எனவே இம்மூன்று இனங்களையும் மற்றும் மேற்குறிப்பிட்டுள்ள வரிசை எண். 1, 3, 5, 6, 7, 8 மற்றும் 9 ஆகிய இனங்களையும் 2012-13 முதல் 2014-15 வரை அல்லது ஒப்படைக்கும் தேதி முதல் 31.03.2015 முடிய பொது ஏலம் விடவும் அவற்றிற்கு ஏல வைப்புத் தொகைகளையும் மற்றும் புதிய ஏல நிபந்தனைகளையும், ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டு ஏல அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை நிர்ணயம் செய்யலாம். மேற்படி இனங்களுக்கு அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகர மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி இனங்களுக்கு ஆகும் விளம்பரக் கட்டணம் மற்றும் இதர செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்.

2. ஏல இனம் வ.எண். 1 முதல் 10 வரை உள்ள இனங்களை பொது ஏலம் விடவும், அவற்றிற்கான ஏல வைப்புத் தொகைகள், புதிய ஏல நிபந்தனைகள் மற்றும் ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ஆம் ஆண்டிற்கான ஏல அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை நிர்ணயம் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**அ1-13600-09**

**350. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி ஆட்சேபனை செய்தார்.**

**8)** ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் சிற்றுந்துகளை சிற்றுந்து நிறுத்தத்தில் நிறுத்துவதற்கென தனியாக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் சிற்றுந்து நிறுத்த இயலாது எனவும் ஏற்கனவே சிற்றுந்துகள் இயக்கப்பட்ட இடத்திலேயே நிறுத்துவதற்கு அனுமதி வேண்டும் எனவும் தெரிவித்து சிற்றுந்து உரிமையாளர்கள் பாதுகாப்பு சங்கம், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். (சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P.3106/2012 மற்றும் 3143/12) மேற்படி வழக்கு 23.02.2012ம் தேதியன்று விசாரணைக்கு வர இருப்பதால் மேற்படி வழக்கில் ஈரோடு மாநகராட்சி சார்பாக திரு. பி. சீனிவாஸ், வழக்கறிஞர் அவர்களை ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும் மேற்படி வழக்கு தொடர்பான வழக்கு கட்டணத்தினை செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1-780-12**

**351. அனுமதி வழங்கப்பட்டது.**

**9)** வேளாண்மை இயக்குநர், ஈரோடு அவர்களின் 20.01.2012ம் தேதிய ந.க.எண். 6-2012ன்படி வேளாண்மை-அட்மா திட்டம் 2011-2012 விவசாயிகளின் நண்பன் திட்டத்தின் கீழ் (Farmers Friend) கீழ்குறிப்பிடப்பட்டுள்ள விவசாயிகளை தேர்வு செய்துள்ளதை மாமன்ற தீர்மானத்தில் ஒப்புதல் பெற்று வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. சு. செல்வராஜ் த-பெ சுப்பிரமணி, கீழ்திண்டல்
2. ர.ரமேஷ் த-பெ தங்கநாதன், எஸ்.எஸ்.அக்ரஹாரம், மரப்பாலம் மெயின்ரோடு, ஈரோடு
3. திரு. செ. பழனிச்சாமி த-பெ சென்னியப்பகவுண்டர், மரப்பாலம் மெயின்ரோடு, ஈரோடு
4. திரு. ப. சின்னசாமி த-பெ பழனியப்பகவுண்டர், முத்தம்பாளையம்
5. திரு. மு. சிவக்குமார் த-பெ முத்துசாமி, 27 காவேரிபாலம், வைராபாளையம்
6. திரு.ந. குப்புசாமி த-பெ தங்கமுத்து 16மெயின்வீதி, தண்ணீர்பந்தல்பாளையம்
7. திரு. ரா. ஆறுமுகம் த-பெ ராமானுஜம், முத்துக்கருப்பணன் சந்து பீளமேடு
8. திரு. மோ. கந்தசாமி த-பெ மோளகவுண்டர், 26 தண்ணீர்பந்தல்பாளையம்
9. திரு. சி. சென்னியப்பன் த-பெ சின்னகவுண்டர், கொத்துக்காரன்புதூர்
10. திரு. வே. பழனிச்சாமி த-பெ வேலப்பகவுண்டர், கங்காபுரம்
11. திரு.செ. தட்சிணாமூர்த்தி த-பெ சென்னியப்பன், சுண்ணாம்புஓடை

மேற்கண்ட விவசாயிகள் அனைவரும் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ளதால் வேளாண்மை-அட்மா திட்டம் 2011-2012 விவசாயிகளின் நண்பன் என்ற திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி திட்டம் அரசு திட்டமாதலால் இத்திட்டத்தின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி விவசாயிகளை அட்மா 2011-2012 (விவசாயிகளின் நண்பன்) திட்டத்தில் தேர்வு செய்துள்ளதை மாமன்றம் ஒப்புதல் வழங்கி வேளாண்மைத்துறைக்கு அனுப்ப அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1-779-12**

**352. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**10)** ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தில் சிப்பம்-5ற்கான கழிவுநீரேற்று நிலையம் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைவான விலைவிகிதம் அளித்த திருவாளர் மெசர்ஸ் ராம்கி இன்பரா ஸ்டெக்ஸர் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்க நகராட்சி நிர்வாக இயக்குநரக ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவிற்கு அனுப்ப மாமன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டது.

மாமன்றம் தனது தீர்மானம் எண். 239 நாள் 27.12.2011ல் மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் உள்ள ஒப்பந்தகுழுவின் அனுமதியைப் பெற்று மீண்டும் மாமன்ற அனுமதியை பெற்று மேல் நடவடிக்கை தொடருமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்த குழுவிற்கு அனுப்பப்பட்டதில் நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியர் அவர்களின் கடிதம் எண். 55420-டி01-2008-1 நாள் 06.02.2012ல் மேற்கண்ட பணியானது மேற்கண்ட நிறுவனமே வடிமைத்தல், கட்டுதல் மற்றும் இயக்கி 5 வருடத்திற்கு பராமரிக்க வேண்டியுள்ளதாலும் இதற்கான தரப்படுத்தப்பட்ட மதிப்பீடு ஏதும் இல்லை என்பதால் இதற்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவின் அனுமதி தேவையில்லை எனவும் தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே தொழில்நுட்ப நிலைக்குழுவின் அனுமதி பெறப்பட்டு விட்டதால் மாநகராட்சியே ஏற்கனவே உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு முடிவு செய்ய அறிவுறுத்தி உள்ளதால், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியான திருவாளர் மெசர்ஸ் ராம்கி இன்பரா ஸ்டெக்ஸர்

லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்தாரின் ஒப்பந்த விலை விகிதமான ரூ.23,81,67,307-ஐ ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.
2. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் மெசர்ஸ் ராம்கி இன்பரா ஸ்டெக்ஸர் லிமிடெட், ஹைதராபாத் எம்பிபிஆர் தொழில்நுட்பத்தில் வடிவமைப்பு செய்து கட்டுதல், இயக்குதலுடன் ஐந்தாண்டு காலம் பராமரிப்பு செய்தும் வழங்க வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

**பா.சா.தி-6459-10**

**353. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி மற்றும் 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் ஆகியோர் ஆட்சேபனை செய்தனர்.**

**11)** ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டத்திற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நேரடி பேச்சுவார்த்தை மூலம் நிலமெடுப்பு செய்த பீளமேடு கிராமம் புலஎண் 88-2, 88-3, 90-2ல் உள்ள வேம்பு, பனை மற்றும் தேக்கு மரங்களுக்கு மறுமதிப்பீடு செய்து மரம் மதிப்பு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்தும், மனுதாரருக்கு வழங்கும்படி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் ந.க.எண். 61583-2008-ஆ1 நாள் 25.01.2012ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | வேம்பு மரம் ஒன்றிற்கு ரூ.500 வீதம் 5 மரங்களுக்கு | 2500- |
| 2. | பனை மரம் ஒன்றிற்கு ரூ.600 வீதம் 7 மரங்களுக்கு | 4200- |
| 3. | தேக்கு செடி 105 செடிக்கு நடப்பு செலவு ரூ.6 வீதம் - 630<br>பராமரிப்பு செலவு செடிக்கு ரூ.4 வீதம் 3 ஆண்டுகளுக்கு<br>(105x3xரூ.4) - 1260 | 1890- |
| | மொத்தம் ரூ. | 8590- |

எனவே மேற்கண்ட தொகை ரூ.8590- சம்பந்தப்பட்ட நில உரிமையாளர் திரு. செ. சுப்ரமணியன் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

ரூ.8590- வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**எப்1-4884-07**

**354. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**12)** இம்மாநகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் திட்டம் மூலம் 2011-12ம் ஆண்டில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிகளுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.540.00 இலட்சத்திற்கு திட்ட பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டது. இதில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 24.02.2012 மின்னஞ்சல் மூலம் மேற்படி திட்டப்பணிக்கு 2011-12ம் ஆண்டிற்கு ரூ.300.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் மேற்கொள்வதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | பணியின் பெயர் | வடிகால் அமைக்கும் நீளம் கி.மீ | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | இம்மாநகராட்சி வார்டு எண்.3 ஜவுளிநகர் மெயின் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | 1.15 | 34.00 |
| 2. | இம்மாநகராட்சி வார்டு எண்.5 காந்திநகர் மெயின் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | 0.80 | 26.70 |
| 3. | இம்மாநகராட்சி வார்டு எண்.2 இந்திரா நகர் மெயின் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | 0.45 | 12.00 |
| 4. | இம்மாநகராட்சி வார்டு எண்.17 பாலாஜிநகர் சாலையில் மழைநீர் வடிகல் கட்டுதல் பணி | 1.716 | 45.50 |
| 5. | இம்மாநகராட்சி வார்டு எண்.17 முதலிதோட்டம் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | 1.012 | 23.00 |
| 6. | இம்மாநகராட்சி வார்டு எண்.17 மற்றும் 18-க்குட்பட்ட ஈ.பி.பி. நகர் மற்றும் எம்.ஜி.ஆர் நகரில் புதியதாக மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | 1.146 | 32.00 |
| 7. | இம்மாநகராட்சி வார்டு எண்.32 பெருந்துறை மெயின்ரோடு வீரப்பன்பாளையம் சந்திப்பு முதல் செங்கோடம்பாளையம் ஓடை வரை புதியதாக மழைநீர் வடிகால் கட்டுதல் | 1.50 | 48.00 |
| 8. | இம்மாநகராட்சி வார்டு எண்.39க்குட்பட்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் அகத்தியர் வீதியிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை புதியதாக மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.6 | 22.50 |
| 9. | இம்மாநகராட்சி வார்டு எண்.46 மற்றும் 48-க்குட்பட்ட பூந்துறை மெயின்ரோட்டில் வாய்கால் மேடு முதல் மூலப்பாளையம் பெட்ரோல் பங்க் வரை புதியதாக மழைநீர் மற்றும் குறுக்கு வடிகால் அமைத்தல் | 1.50 | 70.00 |
| | மொத்தம் | | 313.70 |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் மொத்தம் ரூ.313.70 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் அரசு நிதி ஒதுக்கீடு ரூ.300.00 இலட்சம் போக கூடுதலாக வரக்கூடிய ரூ.13.70 இலட்சம் தொகையினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணிகளை உடன் செய்து முடிக்க வேண்டியதின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1-51-12**

**355. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**13)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 வார்டு எண்.8க்கு உட்பட்ட சி.என். காலேஜ் வளாகத்தின் மேற்கு பக்கம் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சாலை மண்சாலையாக உள்ளது. மேடு பள்ளமாக உள்ள இச்சாலையினை பயன்படுத்தும்போது இப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் மற்றும் போக்குவரத்திற்கு கடினமானதாக உள்ளது. எனவே மேற்படி சாலையினை தார்சாலையாக மாற்றிக் கொடுக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.11.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**இ1-1147-12**

**356. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**14)** தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் (URIP 2011-12)கீழ் ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் முடிக்கப்பட்டு பழுதடைந்துள்ள சாலைகளை அபிவிருத்தி செய்யும் பணி, மண்டலம்-1 சிப்பம்-1ன் பணியின் ஒப்பந்தத் தொகை ரூ.153.21 இலட்சத்திற்கு இரு உறை முறையில் 14.02.2012 அன்று இரண்டாவது அழைப்பில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி விபரம் வருமாறு-

1. ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை தொழில்நுட்ப தகுதிக்கான உறையை 21.02.2012ல் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத்தில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், தொழில்நுட்ப தகுதிகளுக்கான நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டதன்படி வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்ததாக உள்ளது என கூர்ந்தாய்வு குழுவால் பரிந்துரை செய்யப்பட்டது. மேற்படி தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளி விலைப்படிவம் (Price bid ) 22.02.2012 அன்று காலை

11.00 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை ஒப்பந்த மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு-

1. ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட் (+) 10.02 சதவீதம் ஒப்பந்த மதிப்பினை விட அதிகம்.

வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பு தொகைக்கு 1 சதவீதம் டேவணித் தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பு தொகையை விட (+) 10.02 சதவீதம் அதிகமானதாக இருந்ததால் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண். இ1-9993-2011 (மண்டலம்-1, சிப்பம்-1)ன்படி 22.02.2012 தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 24.02.2012 தேதிய கடிதத்தில் 2, 4, 5, 6 மற்றும் 8 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையிலிருந்து குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு ஒப்பந்த மதிப்பு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது, ஒப்பந்த மதிப்பு தொகையை விட (+) 4.98 சதவீதம் அதிகமான விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் உடனடியாக செய்து முடிக்க வேண்டிய அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு இரண்டாம் அழைப்பில் வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பு தொகையை விட (+) 4.98 சதவீதம் அதிகமானதாக உள்ள மேற்படி ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இரண்டாம் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி (+) 4.98 சதவீதம் ஒப்பந்த தொகையைவிட அதிகமானதாக உள்ள மேற்படி ஸ்ரீ ரங்கநாதர் கன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியியல் கையேடு பக்கம் 9, பத்தி எண்.2.7.2ல் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதால் மாமன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

2. இப்பணி திட்டப்பணியாக உள்ளபடியால் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்தகாரருக்கு பணி உத்திரவு வழங்க மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**மண்டலம்-1,சிப்பம்-1**

357. **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.இராதாமணிபாரதி ஆட்சேபனை செய்தார். 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜா. சபுராமாமின்ஹாஜ் ஆட்சேபனை செய்தார்.**

**15)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட 35, 36, 37, 38, 39 மற்றும் 40 வார்டுகளில் அமைந்துள்ள பகுதிகளுக்கு குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்ய வேண்டியிருப்பதால் மண்டல அலுவலகத்தில் அமைந்துள்ள நீர் உந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் இயங்க மின் தடையினால் குடிநீர்

விநியோகம் செய்ய இயலவில்லை. இதனால் இப்பகுதி பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே குடிநீர் விநியோகம் சீர் செய்யும் பொருட்டு பொது மக்கள் நலன் கருதி நீர் உந்து நிலையத்திற்கு 62.50 கே.வி.ஏ திறன் கொண்ட ஜெனரேட்டர் வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்துக்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கு நடவடிக்கை எடுத்தமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**E1/001140/Z1**

**358. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**16)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட மல்லிகை நகர் நீர் உந்து நிலையத்தில் (Booster Station) 4 எண்ணம் 40 கு.வே மற்றும் ஒரு எண்ணம் 25 கு.வே மின்மோட்டார்கள் பயன்பாட்டில் உள்ளது. ஒரே சமயத்தில் மூன்று எண்ணம் 40 கு.வே மின்மோட்டார்கள் இயங்கி நீர் உந்தும் பணியை செய்கின்றன. மண்டலம்-2ன் நகரின் பல்வேறு பகுதிகளுக்கு நீர் உந்தப்பட்டு உயர்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. கோடை காலத்தில் அடிக்கடி ஏற்படும் மின்தடையின் (Power Cut) காரணமாக நீரேற்றும் பணியினை செவ்வனே செய்ய இயலவில்லை. தொடர்ச்சியாக நீர் உந்த முடியாத சூழ்நிலையில் நகரின் சில பகுதிகளில் 5,6 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பணியான குடிநீர் விநியோகத்தினை கருத்தில் கொண்டு தடையின்றி நீர் உந்தும் பணியை செய்யும் பொருட்டு மேற்படி மல்லிகை நகர் நீர் உந்து நிலையத்தில் ஒரு 140 கே.வி.ஏ திறனுள்ள ஜெனரேட்டர் ரூ.16.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் பொருத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி ஜெனரேட்டர் பொருத்தும் பணியினை செய்து முடிக்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஜெனரேட்டர் பொருத்தும் பணியினை செய்து முடிக்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**E1/001117/Z2**

**359. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**17)** ஈரோடு மாநகராட்சியின் 2012-13ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை தொகுப்பு 150 எண்ணிக்கை புத்தக வடிவில் அச்சிட்டு வழங்கும் பணிக்கு மாமன்ற தீர்மான எண்.304 நாள் 09.02.2012-ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஈ-டெண்டர் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | செலவினம் |
|---|---|---|
| 1. | எஸ்.ஆர்.பி. அண்டு கோ | ரூ.2,57,250- |
| 2. | ஏ.பி. நல்லசிவம் | ரூ.2,49,750- |

மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் இருவரும் ஒப்பந்தப்புள்ளிக்குரிய அட்டவணைத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை செலுத்தியுள்ளனர். எனவே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஏ.பி. நல்லசிவம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

**பி1-10722-11**

**360. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**18)** மாநகராட்சி பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் மாமன்ற தீர்மான எண்.264 நாள் 29.06.2010-ன் அனுமதியின்படி Airtel நிறுவன குழு திட்ட சிம்கார்டுகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்போது ஏர்டெல்-ன் சிம்கார்டுகளில் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுவதாலும் உரிய சேவை அவ்வப்போது தடை ஏற்படுவதாலும் தொடர் பயன்பாட்டிற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்படி ஏர்டெல் நிறுவன சிம்கார்டுகளை ரத்து செய்தும் அதற்கு பதிலாக BSNL நிறுவனத்தின் குழு திட்ட சிம்கார்டுகள் கீழ்கண்ட கட்டண விகிதங்களின்படி வாங்கிப் பயன்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Post paid (349+10.3% tax) | = Rs. 385/- | 15 Nos அலுவலர்கள் |
| 2. | Post paid (199+10.3% tax) | = Rs. 220/- | 100 Nos பணியாளர்கள் |

மேற்கண்ட கட்டண விகிதங்கள் ஏர்டெல் நிறுவன கட்டணங்களை விட குறைவாக உள்ளதாலும் இவ்வலுவலக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு BSNL நிறுவனத்தின் CUG-Post paid சிம்கார்டுகள் 115 எண்ணிக்கை வாங்கவும் அதற்கான முன்பணத் தொகையை செலுத்தவும் மற்றும் மாதாந்திர கட்டணங்களை தொடர்ந்து செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2-977-12**

**361. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**19)** ஈரோடு மாநகராட்சி நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் திறந்தவெளிகளில் மனிதக்கழிவு கழிக்கும் நிலை இல்லாதவாறு உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தல் குறித்து ஆணைகள் வெளியிட்டதிற்கிணங்க ஈரோடு மாநகராட்சியில் 2011-12ம் ஆண்டில் மேற்கொள்ள வார்டு எண்.7 வன்னியர் துறை ஆண்கள் கழிப்பிடத்தை இடித்து விட்டு புதியதாக கட்டும் பணிக்கு மாமன்றம் தனது தீர்மானம் எண்.307 நாள் 09.02.12ல் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது மேற்படி பணிக்கு பதிலாக வார்டு எண்.5ல் உள்ள ஞானபுரம் பகுதியில் புதியதாக ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் கட்டவும், பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் சுகாதாரத்தை கருத்தில் கொண்டும், மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி 2011-12ஆம் ஆண்டில் பணிமேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்..

**இ1-10096-11**

**362. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**20)** ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான கனிமார்க்கெட் வளாகம் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. ஏற்கனவே மேற்படி இடத்தில் உள்ள கடைகள் மூலம் மாநகராட்சிக்கு சுமார் ரூ.34,79,500/- வருவாய் பெறப்பட்டு வருகிறது. இதன் மொத்த பரப்பளவு 2.98 ஏக்கர் ஆகும். ஏற்கனவே உள்ள பழைய கடைகளின் எண்ணிக்கை மற்றும் அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லாத காரணத்தால் மேற்படி வளாகத்தில் பழுதடைந்துள்ள கடைகளை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக வாகனங்கள் நிறுத்துமிடத்துடன் கூடிய நவீன அடுக்குமாடி வணிக வளாகம் கட்டினால் மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஈட்டப்படும். மேலும் மேற்படி இடத்தில் வாகன போக்குவரத்து நெரிசலும் குறைய வாய்ப்பு உள்ளது. எனவே கனிமார்க்கெட் வணிக வளாக இடத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடத்துடன் கூடிய அடுக்குமாடி வணிக வளாகம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட வேண்டியுள்ளது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட திண்டல் பகுதியில் ஏற்கனவே திண்டல் ஊராட்சியாக இருந்த போது அதன் பழைய அலுவலகக்கட்டிடம் மற்றும் அதனை சுற்றியுள்ள கட்டிடங்கள் பழுதடைந்துள்ளது. தற்போது இப்பகுதியில் உட்கட்டமைப்பு வளர்ந்து வருகிறபடியால் அவ்விடத்தில் உள்ள பழைய கட்டிடங்களை அகற்றி மற்றும் அதனை சுற்றியுள்ள காலியிடத்தையும் சேர்த்து புதிய வணிக வளாகம் கட்டினால் மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஈட்டப்படும். எனவே மேற்படி பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க வேண்டியுள்ளது.

மேலும் ஈரோட்டின் மையப்பகுதியில் உள்ள பெரும்பள்ளம் ஓடையானது கதிரம்பட்டி பகுதியிலிருந்து நஞ்சனாபுரம், திண்டல், செங்கோடம்பாளையம், சூரம்பட்டி மற்றும் ஈரோடு நகர் வழியாக சென்று காவேரி ஆற்றில் கலக்கிறது. இந்த ஓடையில் துணி பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் சாயக்கழிவுநீர் கலந்து வருவதுடன் நகரின் வீட்டு கழிவு நீர்களும் சேர்ந்து சுகாதாரகேட்டை விளைவிக்கிறது. பெரியார் நகர், சூரம்பட்டி, மரப்பாலம் மற்றும் அசோகபுரி பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இந்த ஓடையிலிருந்து வரும் துர்நாற்றம் மற்றும் கொசுக்கள் பரவுவதால் பெரிதும் பாதிப்படைகின்றனர். ஆகவே மேற்படி பெரும்பள்ளம் ஓடைக்கு அபிவிருத்திப்பணிகள் செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கையை தனியார் ஆலோசகர் மூலம் தயாரிப்பதற்கும் அதற்கான கட்டணத்தை உட்கட்டமைப்பு நிதியின் மூலம் மேற்கொள்வதாகவும் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி சேவை நிதி கழகம் தனது 24.11.11ம் தேதிய கடிதத்தில் ஈரோடு மாநகராட்சியின் ஒப்புதல் கோரியுள்ளார்கள். எனவே மேற்படி திட்டங்களுக்கு TNUIFSL மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தனியார் ஆலோசகர் நியமனம் செய்வதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி சேவை நிதி கழகத்திற்கு பிரேரணைகள் அனுப்புவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1-10761-10**

**363. அனுமதி வழங்கப்பட்டது.**

**21)** ஈரோடு மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள கணினிகளுக்கு தேவைப்படும் டோனர்களை ரூ.4.00 இலட்சம் செலவில் வாங்கி பயன்படுத்த மாமனறத் தீர்மானம் எண்.174 நாள் 21.12.2011-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் டோனர்கள் வாங்க 02.03.12 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

1. Zigma computer links, Erode
2. Vinay Agenices, Erode
3. Power Computer. Erode

மேற்கண்ட மூன்று ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையை செலுத்தியுள்ளனர்.

Zigma computer links, Erode நிறுவனத்தார் வ.எண்.1 முதல் 9 வரை ஒப்பந்தப்புள்ளியில் கண்டுள்ள இனங்களுக்கு குறைந்த விலை விகிதத்தினையும் வினய் ஏஜென்சீஸ், ஈரோடு நிறுவனத்தார் வ.எண்.10 மற்றும் 11ல் கண்டுள்ள இனங்களுக்கு குறைந்த விலை விகிதத்திலும் ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ளனர். இவ்விரண்டு நிறுவனங்கள் வழங்கியுள்ள விலை விகிதங்கள் பின்வருமாறு.

| Sl. No | Materials | Quantity | Zigma computer links, Erode Rate Rs./each | Vinay Agenices, Erode Rate Rs./each |
|---|---|---|---|---|
| 1 | 12A Toner | 10 | 3562 | 4345 |
| 2 | 88A Toner | 10 | 3642 | 3775 |
| 3 | 1053 Toner | 10 | 2613 | 3290 |
| 4 | 108 Toner | 24 | 2590 | 3200 |
| 5 | 53 A Toner | 10 | 5309 | 5855 |
| 6 | 51A Toner | 2 | 7758 | 8600 |
| 7 | 05A Toner | 2 | 3544 | 6000 |
| 8 | 3050 Toner | 3 | 6389 | 8050 |
| 9 | 1610 Toner | 4 | 3292 | 4150 |
| 10 | 24 Pin Cartridge | 40 | 173 | 150 |
| 11 | 9 Pin Cartridge | 25 | 149 | 135 |

மேற்கண்ட பொருட்களில் வ.எண்.1 முதல் 9 வரை குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ரூ.268359/- மொத்த தொகைக்கு Zigma Computer links, Erode நிறுவனத்தார் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ளார். வ.எண்.10 மற்றும் 11ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ரூ.9375/- மொத்த தொகைக்கு Vinay Agencies, Erode நிறுவனம் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ளது. எனவே மேற்கண்ட குறைந்த விலைவிகிதங்களை ஏற்க ஒப்பந்தப்புள்ளி

இறுதி செய்யும் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிறுவனங்களின் விலை விகிதங்களை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கணினிகளுக்கு டோனர் தேவைப்படுவதன் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று டோனர்களை விநியோகம் செய்ய வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1-11511-11**

**364. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**22)** ஈரோடு மாமன்ற தீர்மான எண்.179 நாள் 21.12.2012-ன்படி இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி இயக்கத்திட்டத்தின் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசுக்கு கருத்துரு அளிக்கப்பட்டதில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.47923/2011/இ3 நாள் 01.02.2012ல் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள 7 எண்ணிக்கை பணிகளில் மூன்றாவது பணியாக 4 எண்ணிக்கை Dumper placer vehicle மற்றும் 5 எண்ணிக்கை டிரெயிலர்கள் வாங்குதல் பணியினை ரூ.68.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியில் Dumper placer vehicle 4 எண்ணிக்கை வாங்குவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.58.80 இலட்சமாகும்.

இப்பணியில் 4 எண்ணிக்கை Dumper placer வாகனத்திற்கு தேவையான Chassis-ற்கு "Ashok Leyland Ecomet 1012 -3970mm BS III Chasis fitted with day cabin and PTO" Model-க்கு அரசுக்கான சிறப்பு விலை விகிதமாக ரூ.928097/-ஐ Ashok Leyland நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே மேற்கண்ட 4 எண்ணிக்கை Dumper placer வாகனத்திற்கு தேவைப்படும் Chassis-களை Ashok Leyland நிறுவனத்திடம் நேரிடையாக மேற்கண்ட அரசுக்கான சிறப்பு விலை விகிதத்தில் மொத்தம் ரூ.3712388/- தொகை செலுத்தி வாங்கி கொண்டு Dumper placer equipment-ஐ பொருத்தும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி தனியாக நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியத்தையொட்டி மேற்கண்ட டம்பர் பிளேசர் வாகனங்களுக்கான 4 எண்ணிக்கை Chassis-ஐ Ashok Leyland நிறுவனத்திடமிருந்து நேரடியாக அரசுக்கான சிறப்பு விலை விகிதத்தில் வாங்க நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1-10031-11**

**365. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**23)** ஈரோடு மாமன்ற தீர்மான எண்.179 நாள் 21.12.2011ன்படி இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி இயக்கத்திட்டத்தின் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டதில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் எண்.47923/2011/இ3 நாள் 01.02.2012ல் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ள 7 எண்ணிக்கை பணிகளில் ஐந்தாவது பணியாக 1 எண்ணிக்கை கழிவுநீர் டேங்கர் வாகனத்தை (Sullage tanker vehicle) வாங்குதல் பணியினை ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட கழிவுநீர் டேங்கர் வாகனத்திற்கு தேவைப்படும் Chassis-க்கு "Ashok Leyland Ecomet 1212 -3970mm BS III Chasis fitted with day cabin and PTO" Model-க்கு அரசுக்கான சிறப்பு விலை விகிதமாக ரூ.1057499/-ஐ Ashok Leyland நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே மேற்கண்ட கழிவுநீர் டேங்கர் வாகனத்திற்கு தேவைப்படும் Chassis-ஐ Ashok Leyland நிறுவனத்திடமிருந்து நேரடியாக அரசுக்கான சிறப்பு விலை விகிதமான ரூ.1057499/- செலுத்தி வாங்கிக் கொண்டு டேங்கர் மற்றும் கருவிகள் பொருத்தும் பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி தனியாக நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியத்தையொட்டி மேற்கண்ட கழிவுநீர் டேங்கர் வாகனத்திற்கான Chassis-ஐ Ashok Leyland நிறுவனத்திடமிருந்து நேரடியாக அரசுக்கான சிறப்பு விலை விகிதத்தில் வாங்க நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1-10031-11**

**366. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**24)** ஈரோடு மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு தேவைப்படும் மின் உதிரி பொருட்களை ரூ.30.00 இலட்சம் செலவில் வாங்கி பயன்படுத்த மாமனற் தீர்மானம் எண்.58 நாள் 21.12.2011-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் உதிரி பொருட்களை வாங்க 07.02.12 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

1 Sri Bharath pipe Corporation, Erode
2. Thiru S.K.Mahendran (Sri Ammsam Agency), Kavindapadi, Erode
3. Thiru P.Sampathkumar (Reliant Global Green Energy & Co, Coimbatore.
4. M/s. Murugan Electrical Corporation, Erode.

மேற்கண்ட நிறுவனங்களில் வ.எண்.2ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் டேவணித் தொகையை செலுத்தியுள்ளார். அதே சமயம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலையினை செலுத்தவில்லை. வ.எண்.4ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் டேவணித் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலையினை வழங்கியுள்ளது. ஆனால் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைப்படியான தகுதிக்கான அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர் என்பதற்கான சான்று, வழங்கப்படும் உதிரிப்பொருட்களுக்கான தயாரிப்பு விபரம் ஆகியவற்றை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கவில்லை. எனவே ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி இந்த இரண்டு நிறுவனங்களும் தகுதி பெறவில்லை.

வ.எண்.1 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படியான சான்றினை வழங்கியும் டேவணித் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலையினையும் செலுத்தியுள்ளனர். எனவே ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தகுதி பெற்றுள்ள இவ்விரண்டு நிறுவனங்கள் வழங்கியுள்ள விலை விகிதங்கள் பின்வருமாறு.

| Sl. No | Materials | Quantity | Sri Bharath pipe Corporation, Erode Rate Rs./each | Thiru P.Sampathkumar (Reliant Global Green Energy & Co, Coimbatore Rate Rs./each |
|---|---|---|---|---|
| 1 | 40W FTL bulb | 2750 | 43.50 | 40.00 |
| 2 | 40W FTL Choke | 1100 | 168.60 | 148.00 |
| 3 | 40W FTL Starter | 2650 | 8.40 | 8.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 40W FTL Side holder | 1000 | 8.40 | 7.00 |
| 5 | 36W CFL bulb | 300 | 168.60 | 109.00 |
| 6 | 36W CFL Choke | 500 | 183.00 | 140.00 |
| 7 | 36W CFL side holder | 50 | 21.00 | 20.00 |
| 8 | 70W SVL Bulb | 30 | 264.00 | 204.00 |
| 9 | 70W SVL choke | 30 | 831.00 | 575.00 |
| 10 | 150W SVL bulb | 30 | 381.00 | 325.00 |
| 11 | 150W SVL choke | 20 | 1290.00 | 745.00 |
| 12 | 250W SVL bulb | 80 | 435.00 | 340.00 |
| 13 | 250W MH bulb | 15 | 822.00 | 795.00 |
| 14 | 250W SVL/MH choke | 100 | 1830.00 | 1170.00 |
| 15 | 70/150/250W SVL ligniter | 200 | 183.00 | 145.00 |
| 16 | 250W SVL bulb holder | 45 | 165.00 | 83.00 |
| 17 | 40W MH bulb | 15 | 840.00 | 790.00 |
| 18 | 40W MH choke | 15 | 2820.00 | 1850.00 |
| 19 | 250W MH ligniter | 50 | 183.00 | 145.00 |
| 20 | 3/20 Aluminum coil | 10 | 390.00 | 580.00 |
| 21 | 24W T5 bulb | 200 | 156.00 | 135.00 |
| 22 | PVC insulation Tape | 250 | 9.75 | 30.00 |

மேற்கண்ட பொருட்களில் வ.எண்.1 முதல் 19 மற்றும் வ.எண்.21ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ரூ.715430/- மொத்த தொகைக்கு Thiru P.Sampathkumar (Reliant Global Green Energy & Co, Coimbatore) அவர்கள் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ளார். வ.எண்.20 மற்றும் 22ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ரூ.6337.50 மொத்த தொகைக்கு Sri Bharath pipe Corporation, Erode நிறுவனம் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ளது. எனவே மேற்கண்ட குறைந்த விலைவிகிதங்களை ஏற்க ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிறுவனங்களின் விலை விகிதங்களை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தெருவிளக்கு பராமரிப்பு பொருட்களை விநியோகம் செய்ய வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1-11057-11**

**367. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**25)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு மின் உதிரிப்பொருட்கள் வாங்குதல் பணிக்கு 07.02.12ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையில் இருந்தது. இந்நிலையில் மின் உதிரிப்பொருட்கள் இருப்பு குறைவாக இருந்ததால் மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் வாங்குவதற்கு சிந்தாமணி நிறுவனமான The Erode District Consumer's Co-op whole sale stores Ltd A.A.467 ஈரோடு நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று 40வாட்ஸ் குழல்விளக்குகள் சோக்குகள் மற்றும் ஸ்டார்ட்டர்கள் மட்டும் நேரடியாக ரூ. 1,29,600- விலையில் வாங்கப்பட்டது. தெருவிளக்கு பராமரிப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி

மேற்படி தெருவிளக்கு மின் உதிரிப் பொருட்கள் மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் வாங்கப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டுப் பதிவு செய்யலாம்.

**இ1-488-12**

**368. பார்வையில் பதிவு செய்யப்பட்டது.**

**26)** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான ஆர்.கே.வி. சாலையில் அமைந்துள்ள லூம்வேர்ல்டு கடை எண்.11ல் செயல்பட்டு வந்த தனி அலுவலர், இராசிபுரம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிமிடெட் அவர்களின் கடிதத்தில் தங்கள் சங்கத்தில் எவ்வித உற்பத்தி மற்றும் விற்பனை நடைபெறவில்லை என்றும் சங்கம் முழுவதும் செயல் இழந்து விட்டதால் மேற்படி கடையினை 01.02.2012 முதல் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளனர். எனவே மேற்காணும் கடை எண்.11-ஐ ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொதுஏலம் விடுவதற்கும் அதற்காகும் விளம்பரக் கட்டணம் மற்றும் இதர செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி நிறுவனத்தார் செலுத்த வேண்டிய வாடகை பாக்கியை கோர்ட் மூலம் வசூலிக்க அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**அ1/16080/2007**

**369. அனுமதி வழங்கப்பட்டது.**

**27)** திரு. P. பாஸ்கரராஜ் என்பவர் தனது பெயர் திரு. P. வெங்கடாசலம் என இருந்ததை தமிழ்நாடு அரசிதழ் மூலம் P. பாஸ்கரராஜ் என மாற்றம் செய்து பிறப்பு சான்றிதழில் திருத்தம் செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண். 4480/12 மேற்படி வழக்கில் ஈரோடு மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கை நடத்த திரு. P. சீனிவாஷ் அவர்களுக்கு வக்காலத்து வழங்கவும் மேற்படி வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவினங்களை ஏற்கவும் மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**எச்1/9980/11**

**370. அனுமதி வழங்கப்பட்டது.**

**28)** இம்மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 2012-13 முதல் 2014-15 முடிய அல்லது ஒப்படைக்கும் தேதி முதல் 31.03.2015 முடிய பொது ஏலம் விடவும், அவற்றுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள ஏல வைப்புத்தொகைகளையும் மற்றும் கீழ்க்கண்டுள்ள புதிய ஏல நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண். | குத்தகை இனம் | ஏலம்/ ஒப்பந்தப்-புள்ளி செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. | தேசிய-மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை தொகை ரூ. | ஏலம்/ ஒப்பந்தப்-புள்ளி கேள்வி உறுதி செய்த பின் செலுத்த வேண்டிய தொகை ரூ. | மண்டலம் |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வீரப்பன்சத்திரம் மண்டலம்-1 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி மார்க்கெட்<br>1) வீரப்பன்சத்திரம் பவானி ரோடு வ.உ.சி. பூங்கா வேர் ஹவுஸ் முதல் லட்சுமி தியேட்டர் ஓடை வரை<br>2) அசோகபுரம்<br>3) நெரிக்கல்மேடு<br>4) வைராபாளையம்<br>5) கிருஷ்ணம்பாளையம்<br>6) தெப்பக்குள வீதி<br>7) காவேரி ரோடு ஆகிய அனைத்து பகுதிகள்<br>8) சத்தி ரோடு வடக்கு பகுதி டி.வி.எஸ். கம்பெனி அருகில் வீரப்பன்சத்திரம் பழைய நகராட்சி எல்லை முதல் பஸ் ரூட் நெ.16 திரும்பும் பாதை பகுதி (முனியப்பன் கோவில் எதிர்புறம்) ஆகிய பகுதிகள் குத்தகை அனுபவிக்கும் உரிமம் | 50,000 | 1,00,000- | உரிமத் தொகை முழுவதும் | I |
| 2 | பெரியசேமூர் மண்டலம்-2 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி மார்க்கெட்<br>1) பெரியவலசு<br>2) ஆண்டவர் வீதி (அண்ணா தியேட்டர் பகுதிகள்)<br>3) காசியண்ண வீதி பெரியவலசு ரோடு (பழைய வீரப்பன்சத்திரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள்)<br>4) சம்பத்நகர் (உழவர் சந்தை உட்புறம் நீங்கலாக)<br>5) நசியனூர் ரோடு விவேகானந்தர் சாலை இருபுறமும் (அம்மு மெஸ் முதல் நாச்சாயி டீக்கடை வரை)<br>6) சத்தி ரோடு தெற்கு பகுதி (கண்ணன் ஆயில் மில் முதல் முனியப்பன் கோவில் வரை)<br>7) பெருந்துறை சாலை வடக்குப் பகுதி மட்டும் (சுதா ஹாஸ்பிட்டல் முதல் பாரி நகர் வரை) | 50,000- | 1,00,000- | உரிமத் தொகை முழுவதும் | II |
| 3 | சூரம்பட்டி மண்டலம்-3 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி மார்க்கெட்<br>1) நசியனூர் ரோடு | 50,000 | 50,000 | உரிமத் தொகை முழுவதும் | III |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விவேகானந்தர் சாலை (காந்தி நகர் முதல் வீரப்பம்பாளையம் பிரிவு முடிய இருபுறமும் உள்ள அனைத்து பகுதிகள்)<br>2) ஈரோடு மாநகராட்சி புதிய வார்டு எண் 32-க்குட்பட்ட அனைத்து பகுதிகள் | | | | |
| 4 | ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை ஓரங்களில் நடைபெறும் வியாபாரங்களுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை | 50,000 | 50,000 | உரிமத் தொகை முழுவதும் | II |
| 5 | வார்டு எண்.8 சின்னவலசு மாரியம்மன்கோவில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25,000 | 25,000 | உரிமத் தொகை முழுவதும் | II |
| 6 | வார்டு எண்.19 மாணிக்கம்பாளையம் பள்ளிக்கூடம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25,000 | 25,000 | உரிமத் தொகை முழுவதும் | II |
| 7 | வார்டு எண்.18 ஈ.பி.பி. நகர் மண்டலம்-II பெரிய சேமூர் அலுவலகம் எதிரில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25,000 | 25,000 | உரிமத் தொகை முழுவதும் | II |
| 8 | வார்டு எண்.17 எம்.ஜி.ஆர். நகர் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25,000 | 25,000 | உரிமத் தொகை முழுவதும் | II |
| 9 | வார்டு எண்.17 கனி ராவுத்தர் குளம் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை | 25,000 | 25,000 | உரிமத் தொகை முழுவதும் | II |
| 10 | ஈரோடு நெடுஞ்சாலை கிராமப்புற உட்கோட்ட எல்லைக்குட்பட்ட பெரிய | 10,000 | 10,000 | உரிமத் தொகை முழுவதும் | II |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட மரங்களின் மேல் பலனை அனுபவித்தல் (ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம்-சத்தி-கோபி-ஈரோடு சாலை கி.மீ. 160/6-159-2. மற்றும் 159/2-156-2) | | | | |

ஏலம் நடத்தப்படும் அனைத்து இனங்களுக்கான பொது நிபந்தனைகள்

1. வீரப்பன்சத்திரம் மண்டலம்-1 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி சந்தை நடத்திக் கொள்ளும் உரிமம்
   உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
   காப்புத் தொகை ரூ. 5000/-

2. பெரியசேமூர் மண்டலம்-2 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி சந்தை நடத்திக் கொள்ளும் உரிமம்
   உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
   காப்புத் தொகை ரூ. 5000/-

3. சூரம்பட்டி மண்டலம்-3 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி சந்தை நடத்திக் கொள்ளும் உரிமம்
   உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய
   காப்புத் தொகை ரூ. 5000/-

ஏல நிபந்தனைகள் :

1. அரசினரால் ஏற்படுத்தப்பட்ட உழவர் சந்தைக்கு வரும் விவசாயிகளிடம் சுங்க கட்டணம் வசூலிக்கக்கூடாது.

2. கடைகளிலிருந்து வீட்டு உபயோகத்திற்கோ, இதர உபயோகத்திற்காக வாங்கி வரும் எந்த ஒரு பொருளுக்கும் சுங்கம் வசூலிக்கக் கூடாது. விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கு மட்டுமே சுங்கம் வசூலிக்க வேண்டும்.

3. இம்மாநகராட்சியில் நிர்ணயிக்கப்பட்ட சுங்க கட்டணங்களை விட அதிகமான கட்டணம் வசூலிக்கக் கூடாது. மாநகராட்சி நிர்ணயிக்கப்பட்ட சுங்க கட்டணத்திற்கு அதிகமாக வசூல் செய்யப்பட்டால், குத்தகை உடனடியாக ரத்து செய்யப்பட்டு மறு குத்தகைக்கு விடப்படும்.

4. சுங்க கட்டணம் வசூலிக்க இரசீது வழங்கப்பட வேண்டும்.

5. இரசீது புத்தகங்கள் குத்தகைதாரர் தன் சொந்த செலவில் அச்சடித்து மாநகராட்சியில் ஒப்படைத்து அலுவலக முத்திரை இடப்பட்ட பின்னரே உபயோகப்படுத்த வேண்டும்.

6. கீழ்க்கண்ட விவரப்படி சுங்க கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.
   சுங்க கட்டண விகிதம்

| | | | |
|---|---|---|---|
| 1. | விறகு மற்றும் இதர பொருள்களுடன் விற்பனைக்கு வரும் ஒற்றை மாட்டு வண்டி | - | ரூ.10.00 |
| 2. | விறகு மற்றும் இதர பொருள்களுடன் விற்பனைக்கு வரும் இரட்டை மாட்டு வண்டி | - | ரூ.15.00 |
| 3. | விறகு மற்றும் இதர பொருள்களுடன் விற்பனைக்கு வரும் கைவண்டி | - | ரூ.5.00 |
| 4. | விறகு மற்றும் இதர பொருள்களுடன் சிறிய தள்ளுவண்டியில் | - | ரூ.5.00 |

பொருள்கள் விற்பனைக்கு

| | | | |
|---|---|---|---|
| 5. | சாலை ஓரங்களில் பெட்டிக்கடை வைத்து விற்பனை | - | ரூ.5.00 |
| 6. | சோள தட்டுக்கடை, பூக்கடை ஒன்றுக்கு | - | ரூ.10.00 |
| 7. | இதர கடைகள் | - | ரூ.10.00 |
| 8. | விற்பனை பொருள்களுடன் வரும் லாரி உட்பட அனைத்து நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் ஒன்றுக்கு | - | ரூ.20.00 |

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

4 ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை ஓரங்களில் நடைபெறும் வியாபாரங்களுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 வரை
காப்புத் தொகை ரூ. 2,000/-

5 வார்டு எண்.8 சின்னவலசு மாரியம்மன்கோவில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 வரை
காப்புத் தொகை ரூ. 1,000/-
மின் வைப்புத் தொகை ரூ.1,000/-

6 வார்டு எண்.19 மாணிக்கம்பாளையம் பள்ளிக்கூடம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 வரை
காப்புத் தொகை ரூ. 1,000/-
மின் வைப்புத் தொகை ரூ.1,000/-

7 வார்டு எண்.18 ஈ.பி.பி. நகர் மண்டலம்-II பெரிய சேமூர் அலுவலகம் எதிரில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 வரை
காப்புத் தொகை ரூ. 1,000/-
மின் வைப்புத் தொகை ரூ.1,000/-

8 வார்டு எண்.17 எம்.ஜி.ஆர். நகர் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 வரை
காப்புத் தொகை ரூ. 1,000/-
மின் வைப்புத் தொகை ரூ.1,000/-

9 வார்டு எண்.17 கனி ராவுத்தர் குளம் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 வரை
காப்புத் தொகை ரூ. 1,000/-
மின் வைப்புத் தொகை ரூ.1,000/-

10 ஈரோடு நெடுஞ்சாலை கிராமப்புற உட்கோட்ட எ்லலைக்குட்பட்ட பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட மரங்களின் மேல் பலனை அனுபவித்தல் (ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம்-சத்தி-கோபி-ஈரோடு சாலை கி.மீ.160/6-159-2. மற்றும் 159/2-156-2) உரிமக்காலம் 01.04.2012 முதல் 31.03.2015 வரை

காப்புத் தொகை ரூ. 1,000/-

**<u>ஏல நிபந்தனைகள்:</u>**

1 பெரிய சேமூர் மண்டலம்-[I தினசரி மார்க்கெட் கட்டிடம் கட்டும் வரை பெரிய சேமூர் பழைய நகராட்சி பகுதிகளிலும், சாலை ஓரங்களில் நடைபெறும் வியாபாரங்களுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை குத்தகைக்கு விடப்படுகிறது.

2 எந்த காரணத்தைக் கொண்டும் பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்கு வெளியே வசூல் செய்யக்கூடாது.

3 சுங்கம் வசூல் செய்யும் விசயத்தில் கட்டண விகிதங்கிளிலோ அல்லது கட்டணம் வசூலிக்கத்தக்க சாமான்கள், லாரி, மோட்டார், வேன் இவைகள் விசயமாக ஏற்படும் தகராறுகளில் ஆணையாளர் அவர்களின் தீர்ப்பே முடிவானதும், குத்தகைதாரரைக் கட்டுப்படுத்துவதுமாகும்.

4 வசூல் செய்யும் தொகைக்கு வெவ்வேறு நிறத்தில் தனித்தனி தொடர் இலக்கம் கொண்ட அச்சிடப்பட்ட ரசீதுகள் கொடுக்கப்பட வேண்டும். ரசீதுகள் உபயோகிக்கும் முன் மாநகராட்சியில் சீல் வைத்துப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5 வசூல் செய்ய குத்தகைதாரர் நியமிக்கும் ஆட்களின் பெயர் விலாசம் முதலானவற்றை முன்னதாகவே மாநகராட்சி அலுவலகத்திற்கு தெரியப்படுத்திவிட வேண்டும். இதில் அவ்வப்போது செய்யப்படும் மாறுதல்களை உடனுக்குடன் மாநகராட்சி அலுவலகத்திற்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்.

6 பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குள் நிரந்தரமாய் வைத்து இருக்கும் கடைகளுக்குச் சொந்தமாக சாமான்கள் கொண்டு வரும் பார வண்டிகளுக்கு சுங்கம் வசூல் செய்யக்கூடாது.

7 பால், தயிர்,மோர் இவைகளுக்கு கட்டணம் வசூல் செய்யக் கூடாது.

8 கட்டண கழிப்பிடத்திற்கு உபயோகப்படுத்தப்படும் மின் கட்டணம், மோட்டார் இயக்குவதற்குரிய மின் கட்டணம் மற்றும் மோட்டார் பழுது சம்பந்தமான செலவுகளை ஏலம் எடுப்பவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

9 தினசரி மார்க்கெட் வியாபாரங்கள் கீழ்க்கண்ட விகிதங்களில் சுங்கம் வசூலிக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இவ்விகிதங்களுக்கு மேல் வசூல் செய்யக் கூடாது.

| | | | |
|---|---|---|---|
| 1 | விறகு மற்றும் இதர பொருள்களுடன் வரும் ஒற்றை மாட்டு வண்டி ஒன்றுக்கு | - | ரூ.3.00 |
| 2 | விறகு மற்றும் இதர பொருள்களுடன் வரும் இரட்டை மாட்டு வண்டி ஒன்றுக்கு | - | ரூ.5.00 |
| 3 | மிதிவண்டி சிறிய தள்ளுவண்டிகளில் பொருட்கள் விற்பனை செய்தல் | - | ரூ.2.00 |
| 4 | சாலை ஓரங்களில் கட்டில்களில் வைத்து விற்பனை செய்தல் | - | ரூ.2.00 |
| 5 | சோளத்தட்டு கடை ஒன்றுக்கு | - | ரூ.5.00 |
| 6 | புல் கடை ஒன்றுக்கு | - | ரூ.3.00 |
| 7 | விற்பனை பொருட்களுடன் வரும் லாரி உட்பட நான்கு சக்கர வாகனங்கள் ஒன்றுக்கு | - | ரூ.10.00 |
| 8 | மேலே குறிப்பிட்ட இனங்களில் சேர்க்கப்படாத இதர வகைகளில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்கள் | - | ரூ.5.00 |

ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ம் ஆண்டிற்கான பொது ஏல அறிக்கையில் கண்டுள்ளவாறு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்யலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள வரிசை எண். 1 முதல் 10 முடிய உள்ள இனங்களை 2012-2013 முதல் 2014-15 முடிய அல்லது ஒப்படைக்கும் தேதி முதல் 31.03.2015 முடிய பொது ஏலம்

விடவும் அவற்றிற்கு ஏல வைப்புத் தொகைகளையும் மற்றும் புதிய ஏல நிபந்தனைகளையும், மேலும் 2010-13-ம் ஆண்டு பொது ஏல அறிக்கையில் கண்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை நிர்ணயம் செய்யவும், மேற்படி இனங்களுக்கு விளம்பரக் கட்டணம் மற்றும் இதர செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி இனங்களுக்கு ஆகும் விளம்பரக் கட்டணம் மற்றும் இதர செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1) அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்.

2) ஏல இனம் வ.எண். 1 முதல் 10 வரை உள்ள இனங்களை பொது ஏலம் விடவும், அவற்றிற்கான ஏல வைப்புத் தொகைகள், புதிய ஏல நிபந்தனைகள் மற்றும் ஈரோடு மாநகராட்சியின் 2010-13-ஆம் ஆண்டிற்கான ஏல அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளையும் நிர்ணயம் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**அ1/13600/2009**

**371. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி ஆட்சேபனை செய்தார்.**

**29)** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண். 2053/2011/அ3 நாள் 25.01.2012-ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (மேற்கு) 2011-2012ல் வார்டு எண்.1 வாய்க்கால் மேட்டில் புதியதாக கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.7.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். அதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு 28.02.2012 அன்று முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியுடன் 1 சதவீத டேவணித் தொகையினை வங்கி வைப்புத் தொகைக்கான பத்திரத்தை இணைத்துள்ளார். மேலும் ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்பு நோக்குகையில் மதிப்பீட்டை விட 8.62 சதவீதம் அதிகமானதாக விலைவிகிதம் உள்ள எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன் அவர்களுக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக ம.எண். இ1/3734/2011, நாள் 29.02.2012 தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 09.03.2012 தேதிய கடிதத்தில் அனைத்து இனங்களுக்கும் விலையை குறைத்துக் கொடுத்துள்ளார். அதனடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்பு நோக்குகையில் பெறப்பட்ட விவரம் பின்வருமாறு-

1. எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன் 0.006 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு

எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.006 சதவீதம் குறைவானதாகவும் உள்ள எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளயை ஏற்கலாம். திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. இவ்வேலைக்கு முதலாம் அழைப்பாக வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி குறைவானதாகவும், மதிப்பீட்டை விட 0.006 சதவீதம் குறைவானதாகவும் உள்ள எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/3734/11**

**372. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**30)** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண். 2053/2011/அ3 நாள் 25.01.2012-ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (மேற்கு) 2011-2012ல் வார்டு எண்.3 பெருமாள் மலையில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.7.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். அதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு 28.02.2012 அன்று இரண்டாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட திரு. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியுடன் 1 சதவீத டேவணித் தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். மேலும் ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்பு நோக்குகையில் மதிப்பீட்டை விட 12.76 சதவீதம் அதிகமானதாக விலைவிகிதம் உள்ள திரு. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக ம.எண். இ1/3734/2011, நாள் 29.02.2012 தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 09.03.2012 தேதிய கடிதத்தில் இனம் எண்.1 முதல் 9 வரை விலைவிகிதம் குறைத்துக் கொடுத்துள்ளார். அதனடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்பு நோக்குகையில் பெறப்பட்ட விவரம் பின்வருமாறு-

1. திரு. எம். கிருஷ்ணமூர்த்தி 0.02 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு

எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.02 சதவீதம் குறைவானதாக உள்ள திரு. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளயை ஏற்கலாம். திட்டப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. இவ்வேலைக்கு முதலாம் அழைப்பாக வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி குறைவானதாகவும், மதிப்பீட்டை விட 0.02 சதவீதம் குறைவானதாகவும் உள்ள திரு. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/3734/11**

373. **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**.

**31)** நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் திறந்தவெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலையை போக்குதல் திட்டம் (Eradication of Open Defecation) 2011-12ஆம் ஆண்டின் கீழ் வார்டு எண். 31ல் வில்லரசம்பட்டி காந்திநகர் பகுதியில் புதியதாக பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.9.50 இலட்சத்திற்கு இம்மாமன்ற தீர்மான எண். 307 நாள் 09.02.2012ல் அனுமதி பெறப்பட்டு 01.03.2012 தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஈ-டெண்டரிங் மூலமாக முதல் முறையாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

திரு. ஏ. செல்வராஜ் - 4.72 சதவீதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் 1 சதவீதம் டேவணித் தொகையை மாநகராட்சியில் செலுத்தியுள்ளார்கள்.

எனவே பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும்போது மதிப்பீட்டு விலையை விட 4.72 சதவீதம் அதிகமாக ஒப்பந்ததாரர் திரு. ஏ. செல்வராஜ் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்ககோரி இவ்வலுவலக ம.எண். 184 நாள் 01.03.2012ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 02.03.2012ம் தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண். 3,8,11,14,16,25,27,30,32,1,32,31 மற்றும் 33 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையிலிருந்து குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையை கொண்டு ஒப்பந்த மதிப்பு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது ஒப்பந்த மதிப்பீட்டு தொகையை விட 0.06

சதவீதம் குறைவான விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.06 சதவீதம் குறைவான விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.06 சதவீதம் குறைவாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. இவ்வேலைக்கு முதன் முறையாக வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட 0.06 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ம.எண்.184/11-12**

374. **அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**.

**32)** நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் திறந்தவெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலையை போக்குதல் திட்டம் (Eradication of Open Defecation) 2011-12ஆம் ஆண்டின் கீழ் வார்டு எண். 45ல் புதுமைக்காலனி ஜவான்பவன் பின்புறம் உள்ள பழுதடைந்த கழிப்பிடத்தை அகற்றி புதியதாக பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.9.45 இலட்சத்திற்கு இம்மாமன்ற தீர்மான எண். 307 நாள் 09.02.2012ல் அனுமதி பெறப்பட்டு 01.03.2012 தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஈ-டெண்டரிங் மூலமாக முதல் முறையாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

திரு. டி. கஜபதி - 23.35 சதவீதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் 1 சதவீதம் டேவணித் தொகையை மாநகராட்சியில் செலுத்தியுள்ளார்கள்.

எனவே பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும்போது மதிப்பீட்டு விலையை விட 23.35 சதவீதம் அதிகமாக ஒப்பந்ததாரர் திரு. டி. கஜபதி ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்ககோரி இவ்வலுவலக ம.எண். 187 நாள் 01.03.2012ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 02.03.2012ம் தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண். 5 மற்றும் 10 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையிலிருந்து குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையை கொண்டு ஒப்பந்த மதிப்பு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது ஒப்பந்த மதிப்பீட்டு தொகையை விட 0.01 சதவீதம் குறைவான விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.01 சதவீதம் குறைவாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. இவ்வேலைக்கு முதன் முறையாக வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட 0.01 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள திரு. டி. கஜபதி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ம.எண்.187/11-12**

375. **அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**.

**33)** நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் திறந்தவெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலையை போக்குதல் திட்டம் (Eradication of Open Defecation) 2011-12ஆம் ஆண்டின் கீழ் வார்டு எண். 31ல் வில்லரசம்பட்டி எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் புதியதாக பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.9.50 இலட்சத்திற்கு இம்மாமன்ற தீர்மான எண். 307 நாள் 09.02.2012ல் அனுமதி பெறப்பட்டு 01.03.2012 தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஈ-டெண்டரிங் மூலமாக முதல் முறையாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

திரு. என். கண்ணன் - 4.95 சதவீதம் மதிப்பீட்டு விலையை விட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் 1 சதவீதம் டேவணித் தொகையை மாநகராட்சியில் செலுத்தியுள்ளார்கள்.

எனவே பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும்போது மதிப்பீட்டு விலையை விட 4.95 சதவீதம் அதிகமாக ஒப்பந்ததாரர் திரு. என். கண்ணன் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்ககோரி இவ்வலுவலக ம.எண். 186 நாள் 01.03.2012ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 02.03.2012ம் தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண். 1,3,6,8,14,25 மற்றும் 33 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையிலிருந்து குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையை கொண்டு ஒப்பந்த மதிப்பு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது ஒப்பந்த மதிப்பீட்டு தொகையை விட 0.02 சதவீதம் குறைவான விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.02 சதவீதம் குறைவாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. இவ்வேலைக்கு முதன் முறையாக வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட 0.02 சதவீதம் குறைவாக வழங்கியுள்ள திரு. என். கண்ணன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**ம.எண்.186/11-12**

**376. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**34)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் புதியதாக மினிபேருந்து நிறுத்தம் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் விடப்பட்டுள்ளது. இதில் மினிபேருந்து நிலையத்தில் மேற்கு பகுதி சாய்தளத்தின் வழியாக மினிபேருந்துகள் உள்ளே சென்று கிழக்கு பகுதி சாய்தளத்தின் வழியாக வெளியே செல்லுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

இதில் மினிபேருந்துகள் மேற்படி நிறுத்தத்திற்கு அடுத்தடுத்து வந்து செல்லுவதால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டும், மேற்படி மினிபேருந்து நிலையத்தின் மேற்கு மற்றும் கிழக்கு பகுதியில் கூடுதலாக சாய்வுதளங்கள் அமைக்கவும், மினிபேருந்து நிலையத்தின் தெற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கைப்பிடிச்சுவற்றிற்கு கிரில் அமைக்கவும், மேலும் கிழக்கு பகுதியில் மாநகராட்சி திருமண மண்டபத்தின் பழுதடைந்துள்ள சுற்றுச்சுவரை அகற்றி திருத்திக் கட்டிடவும் கிழக்கு பகுதி நுழைவு வாயிலை அகலப்படுத்தவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.13.50 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

பணியின் அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**இ1/1380/12**

**377. அனுமதி வழங்கப்பட்டது.**

**35)** ஈரோடு மாநகராட்சி பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலை அமைக்கும் திட்டம் 2011-12 இத்திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மான எண்.295 நாள் 09.02.12 மண்டலம்-4 ராஜகோபால் தோட்டம், பச்சியம்மன் கோவில் வீதி மற்றும் ராயல் லே-அவுட் பகுதியில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார்சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 21.56 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு 02.03.12 அன்று முதன் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொருட்டு வரப்பெற்ற விபரம் கீழ்கண்டவாறு.

1. திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் + 4.80% மதிப்பீட்டைவிட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் 1% டேவணித்தொகைக்கான வங்கி நிரந்திர வைப்புத் தொகை ரசீது இணைத்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (+) 4.80 % அதிகமான விலைவிகதம் உள்ள திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் ஒப்பந்ததாருக்கு மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண்.இ1/269/12 நாள் 02.03.12-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 03.03.12 தேதிய கடிதத்தில் இனம் எண்.1க்கு மதிப்பீட்டு விலை விகிதத்தை விட விலையை குறைத்து கொடுத்துள்ளார். இதன் அடிப்படையில் மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது (-) 0.02% குறைவாக உள்ளது. எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட (-) 0.02% குறைவாக கொடுத்துள்ள திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டபணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/269/12**

**378. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**36)** ஈரோடு மாநகராட்சி பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலை அமைக்கும் திட்டம் 2011-12 இத்திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மான எண்.295 நாள் 09.02.2012ல் மாநகராட்சிக்கு சொந்தமான வெண்டிபாளையம் உரக்கிடங்கில் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரம் செய்யும் கிடங்கு கட்டும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 6.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு 02.03.12 அன்று முதன் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொருட்டு வரப்பெற்ற விபரம் கீழ்கண்டவாறு.

1. திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் + 4.80% மதிப்பீட்டைவிட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் 1% டேவணித்தொகைக்கான வங்கி நிரந்திர வைப்புத் தொகை ரசீது இணைத்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (+) 4.80 % அதிகமான விலைவிகதம் உள்ள திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் ஒப்பந்ததாருக்கு மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண்.இ1/269/12 நாள் 02.03.12-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 03.03.12 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டு விலை விகிதத்திலேயே இப்பணியை செய்துதர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்திலேயே இப்பணியை செய்துதர சம்மதம் தெரிவித்துள்ள திருவாளர் நடராஜா

கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களுக்கு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களுக்கு பணி உத்திரவு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டபணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருவாளர் நடராஜா கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/269/12**

**379. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**37)** ஈரோடு மாநகராட்சியில் திறந்தவெளி கழிப்பிடம் ஒழிக்கும் திட்டம் 2011-12 இத்திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மான எண். 178 நாள் 21.12.11-ன்படி மண்டலம்-4 அன்னை சத்யா நகர் (நரிக்குறவர் காலனி) புதியதாக கழிப்பிடம் கட்டும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு 01.03.12 அன்று முதன் முறையாக E-tendering முறையில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொருட்டு வரப்பெற்ற விபரம் கீழ்கண்டவாறு.

1. திருவாளர் சரவணா அன் கோ + 4.91% மதிப்பீட்டைவிட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் 1% டேவணித்தொகையாக ஈரோடு மாநகராட்சியில் தொகையாக செலுத்தியுள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (+) 4.91% அதிகமான விலைவிகதம் உள்ள திருவாளர் சரவணா அன் கோ ஒப்பந்ததாருக்கு மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண்.இ1/10096/11 நாள் 02.03.12-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 03.03.12 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து 0.01% விலையை குறைத்து பணியினை செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (-) 0.01% குறைவாக விலை விகிதம் உள்ள திருவாளர் சரவணா அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று திருவாளர் சரவணா அன் கோ அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டபணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருவாளர் சரவணா அன் கோ அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/269/12**

**380. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**38)** ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2011-12 இத்திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.2075/2011/அ3 நாள் 09.02.12-ன்படி மண்டலம்-4 அன்னை சத்யா நகர் மையானம் புதியதாக கழிப்பிடம் கட்டும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு 28.02.12 அன்று முதன் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொருட்டு வரப்பெற்ற விபரம் கீழ்கண்டவாறு.

1. திரு டி.விஜயகுமார் + 4.91% மதிப்பீட்டைவிட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் 1% டேவணித்தொகையாக ஈரோடு மாநகராட்சியில் தொகையாக செலுத்தியுள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (+) 4.91% அதிகமான விலைவிகிதம் உள்ள திரு டி.விஜயகுமார் ஒப்பந்ததாருக்கு மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண்.இ1/10096/11 நாள் 02.03.12-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 03.03.12 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து 0.01% விலையை குறைத்து பணியினை செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (-) 0.01% குறைவாக விலை விகிதம் உள்ள திரு டி.விஜயகுமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று திரு டி. விஜயகுமார் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டபணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு டி.விஜயகுமார் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/3734/11**

**381. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**39)** இம்மாமன்ற 09.02.2012 தேதிய 307ஆம் எண். தீர்மானம் ஒப்புதல் பெற்றுள்ள வார்டு எண்.29ல் கே.என்.கே ரோடு பின்புறம் புதியதாக கழிப்பிடம் கட்டுதல் மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு இவ்வேலைக்கு 28.02.12 அன்று 2வது முறையாக வரப்பெற்றுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு

1. திரு எஸ். கோவிந்தராஜன் (+) 4.92% மதிப்பீட்டைவிட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் 1 சதவீதம் டேவணித் தொகையாக மாநகராட்சியில் தொகையாக செலுத்தியுள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+)4.92 சதவீதம் அதிகமாக விலைவிகிதம் உள்ளதால் மேலும் விலையை குறைத்து கொடுக்க இவ்வலுவலக ந.க.எண்.3724/11 நாள் 05.03.12 தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 13.02.12 தேதிய கடிதத்தில் இனம் எண்.1 முதல் 47 வரை உள்ள இனத்திற்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை குறைத்துக் கொடுத்துள்ளார். இவ்வேலை குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.02 சதவீதம் குறைவான உள்ள திரு. எஸ். கோவிந்தராஜன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

அலுவலகக் குறிப்பு-

1. இவ்வேலைக்கு 2வது முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 0.02 சதவீதம் குறைவான விலைவிகிதத்தில் உள்ள திரு. எஸ். கோவிந்தராஜன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(இ1/10096/11)**

**382. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**40)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2ற்குட்பட்ட வார்டு எண்.30 கருங்கல்பாளையம் மாநகராட்சி மகளிர் மேல்நிலை பள்ளியில் புதியதாக கலையரங்கம் கட்டுதல் மதிப்பீடு ரூ.5.50 இலட்சம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2011-12ல் ந.க.எண்.2075/2011/இ3 நாள் 09.02.12ன்படி இப்பணிக்கு 28.02.2012 அன்று முதல் முறையாக ஈ-டெண்டரிங் ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு

1. திரு டி. கஜபதி (+) 19.77% மதிப்பீட்டைவிட அதிகம்

இப்பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையாக மாநகராட்சியில் தொகையாக செலுத்தியுள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 19.77% அதிகமாக விலை விகிதம் உள்ளதால் இவ்வலுவலக ந.க.எண். 3724/11 நாள் 05.03.12 தேதியில் மேலும் விலையை குறைத்துக் கொடுக்க அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 12.03.12 தேதிய கடிதத்தில் இனம் எண்.1,2,3,4,5,6, 7,8,9,10,11,12,13,14,16,17 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள வேலையை குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையை கொண்டு மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.16 சதவீதம் குறைவான விலைவிகிதம் உள்ளது. எனவே மதிப்பீட்டை விட (-) 0.16 சதவீதம் குறைவான விலைவிகிதம் உள்ள திரு. டி. கஜபதி அவர்கள் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

அலுவலகக் குறிப்பு-

1. இவ்வேலைக்கு முதல் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.16 சதவீதம் குறைவான விலைவிகிதம் உள்ள திரு. டி. கஜபதி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு. டி. கஜபதி அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ம.எண்.221/11-12**

**383. அலுவலகக் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**41) 3-ஆவது மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட வ.உ.சி. பூங்காவை சுற்றியுள்ள காலி இடங்களில் மாநகராட்சி கடைகளை கட்டி மாநகராட்சியின் வருவாயினை பெருக்குவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட கனிமார்க்கெட்டில் டெல்லி பாலிகா பஜார் போல மேல்புறம் வாகனங்கள் நிறுத்துவதற்கு வசதி செய்து, பாதாள கடைகள் கட்டி மாநகராட்சியின் வருவாயினை பெருக்குவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட பெரும்பள்ளம் ஓடைப் பகுதியின் இரண்டு பகுதிகளிலும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் சாலை வசதிகள் செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பெரியார் நகர் 80அடி சாலை ராஜா பஸ்கம்பெனியிலிருந்து கள்ளியங்காடு வரை பெரும்பள்ளம் ஓடையில் மேம்பாலம் அமைத்து 80அடி திட்டச்சாலையை ரயில் நிலையம் முதல் சென்னிமலை சாலை வரை நீட்டிப்பு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**384. 3ஆவது மண்டலத்தலைவர் திரு.இரா.மனோகரன் அவர்கள் முன்மொழிய 2ஆவது மண்டலத் தலைவர் திரு. பி. கேசவமூர்த்தி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**42) 13-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. ராஜா அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- கிருஷ்ணம்பாளையம் காலனியில் மேற்கு தெருவில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து மின்மோட்டார் பொருத்தி பைப் லைன் மூலம் தண்ணீர் வழங்க மாமன்றம் தீர்மானிக்கிறது.
- திருநகர் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதியதாக வகுப்பறை கட்டிடங்கள் கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**385. 13ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. ராஜா அவர்கள் முன்மொழிய திரு. கே. அண்ணாமலை 15ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**43) 25-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.கு. நடராஜன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- நடேசர் மில் காம்பவுண்ட் பகுதியில் 7 எண்ணிக்கை சி.எப்.எல் விளக்குகளும், தனியாக தெருவிளக்கு அமைத்து தானியங்கி சுவிட்ச் பொருத்தவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- இடையன்காட்டு வலசு மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் ஆரம்பப் பள்ளிக்கு கட்டிட இடவசதி குறைவாக உள்ள காரணத்தால் மாணாக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். எனவே திரு.வி.க. வீதியில் உள்ள மாநகராட்சி காலியிடத்தில் மத்திய அரசின் (எஸ்.எம்.டி.சி) நிதி மூலம் வகுப்பறைகள் கட்டிக்கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**386. 25ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் கு. நடராஜன் அவர்கள் முன்மொழிய 26ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. சி. பாஸ்கர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**44) 27-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- தொழுநோயாளிகளுக்கு தொண்டு புரிந்து பத்மஸ்ரீ விருதிற்கு தேர்வு பெற்ற பிரப்சாலையில் பிறப்பிடமாக குடியிருந்த திரு.கோபால் அவர்களுக்கு இம்மான்றம் தனது பாராட்டுகளை தெரிவிக்கின்றது.

கீழ்கண்ட பகுதிகளில் தலா ஒரு இரும்பு குப்பைக்கலன்கள் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- என்.எம்.எஸ். காம்பவுண்டு ராயல் மாணிக்கம் பில்டிங் கார்னர்.
- என்.எம்.எஸ். காம்பவுண்டு கே.என். முருகேஷ் கடை எதிரில்.
- என்.எம்.எஸ். காம்பவுண்டு ஸ்ரீ விக்னேஷ் மில்ஸ் கடை எதிரில்.
- ஈஸ்வரன் கோயில் கிடங்கு தெரு
- ஈஸ்வரன் கோயில் ராஜா ஆஸ்பத்திரி அருகில் உள்ள அடுக்குமாடி காம்ப்ளக்ஸ்
- ராமசாமி வீதி, சொக்கநாதர் வீதி, ஈஸ்வரன்கோயில் வீதி-திருவேங்கடசாமி வீதி சந்திப்பு
- கொத்துக்கார நல்லா வீதி – காமராஜ் வீதி சந்திப்பு

- தில்லைநகர் – செங்குந்தர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில்
- வாசுகி வீதி-3, 4 இணையும் குப்பண்ணா ஓட்டல் எதிரில்
- வாசுகி வீதி-1 திருவள்ளுவர் குடிசை மீன் கடை எதிரில்
- செங்குந்தர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பெருமாள் கோயில் வீதி அல்லது சிலம்பரான் குட்டை மார்க்கட் பகுதி கல்வி நிலையம் இருந்த காலி இடம் இவற்றில் ஏதாவது ஒரு இடத்தில் ரேசன் கடை கட்டிடம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கப்படுகிறது.

**387. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி அவர்கள் முன்மொழிய 45ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. என். விநாயகமூர்த்தி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**45)** இம்மாமன்றம் தனது 09.02.12ம் தேதிய தீர்மானத்தில் மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண். 16ல் கங்காபுரம் முதல் கொளத்துப்பாளையம் வரை உள்ள சாலைக்கு பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி மறுதார்தளம் அமைத்தல் பணிக்கு ரூ.16.50 லட்சத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ந.க.எண். இ1/269/2012 நாள் 20.02.12) அதனை தொடர்ந்து இப்பணிக்கு 02.03.12ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர் வங்கி சேமிப்பு பத்திரமாக செலுத்தியுள்ளார். எனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு-

திரு கே. முருகேசன் (+) 4.98% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர் இப்பணிக்கு ஏற்கனவே கொடுத்த விலைப்புள்ளியை குறைத்து கொடுக்க இவ்வலுவலக கடித எண். இ1/3734/2011 நாள் 05.03.12ல் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதற்கு மேற்படி ஒப்பந்ததாரர் தனது 09.03.2011 தேதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.05 சதவீதம் குறைத்து பணிகள் செய்ய ஒப்பந்ததாரர் திரு. கே. முருகேசன் அவர்கள் சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார். எனவே பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு. கே. முருகேசன (-0.05 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு. கே. முருகேசன் (-0.05 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/269/12**

**388. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்,**

**நாள்- 02.04.2012** **ஈரோடு மாநகராட்சி**